


# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

## பொருளடக்கம்


பன்னிரண்டு நட்சத்திரங்கள் ............................ 2

மிலேத்துவில் பவுல் ........................................ 7

அர்ப்பணிக்கப்பட்ட பலி .................................... 9

எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய வீடு ... 14

பேழை உருவாகிக் கொண்டிருந்த போது .......... 17

வேதாகமக் கேள்வி பதில்கள் .......................... 18

யூபிலியை அறிவிக்கும் எக்காளத்தை ஊதுதல் ... 19



BS 853

Tamil Version - 3

# பன்னிரண்டு நட்சத்திரங்கள்

**TWELVE STARS**

*“அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்திருக்கிறாய்.”* வெளி. 2 : 2.

கடந்த பல நூற்றாண்டு காலங்களாக இவ்வுலகைச் சேர்ந்த ஒரு வகுப்பார், தாங்கள் தான் அப்போஸ்தலர்களாக இருந்து வருகிறோம் என உரிமைக் கோரி வருகிறார்கள். ஆனால் நம்முடைய பாட வாக்கியத்தின்படி அவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல. தேவன் ஒருபோதும் ஆட்டுக் குட்டியானவருக்கு பன்னிரண்டு அப்போஸ்தலருக்கும் மேலாக அதிக எண்ணிக்கை இருக்குமாறு திட்டமிடவில்லை என்று தவறின்றி வேதாகமம் காட்டுகிறது. இந்த கருத்தின் அடிப்படையில் நாம் நம்முடைய நினைவுகளைப் புதுப்பிப்போமாக. நமது ஆண்டவராகிய இயேசு பன்னிரு வருக்கு பின் வருமாறு கூறியிருந்தார். *“மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தன்னுடைய மகிமையுள்ள சிங்காசனத்தன்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”* (மத். 19 : 28). அங்கே அப்போஸ்தலர் களுக்கு பன்னிரண்டு சிங்காசனங்கள் மாத்திரமே இருக்கும். அதற்கு அதிகமாக இல்லை. மேலும் வெளிப்படுத்துதல் 12 : 1-ல் திருச்சபை ஸ்திரிக்கு ஒப்பிட்டு பேசப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்திரி சூரியனை (சுவிசேஷம்) அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும் (யூத நியாயப்பிரமாணமும்) அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள (அவளுடைய தெய்வீக நியமனம் செய்யப்பட்ட, ஆவியினால் ஏவப்பட்ட போதகர்கள்) கிரீடமும் இருந்தன. தேவனால் அதிகாரப் பூர்வமாக வழங்கப்பட்டிருப்பது இந்த பன்னிரண்டு நட்சத்திரங்கள் மாத்திரமே என்று நாம் காண்கிறோம். யூதாசின் இடத்தை பரி. பவுல் எடுத்துக் கொள்கிறார்.

நமது ஆண்டவர் மூலம் வெளிப்படுத்தல் கொடுக்கப் பட்ட இந்த விஷயத்தின் மற்றொரு காட்சியை உங்களுக்கு இப்போது நினைப்பூட்டுகிறேன். இது வெளிப்படுத்துதல் புஸ்தகத்தில் 21-ம் அதிகாரம் 1-5, 9-27 வசனங்களில் பூமியை ஆசீர்வதிக்கும் அவளுடைய மாபெரும் வேலையைத் தொடங்குவதற்காக மகிமைப்படுத்தப்பட்ட சபை பரத்திலிருந்து கீழே இறங்கி வருவது சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. *“நகரத்தின் மதிலுக்கு பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன. அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன”* என்பதை கூர்ந்து கவனியுங்கள். (வெளி. 21 : 14) இந்த மகிமையடைந்த சபையானது, பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களும் அதில் ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் நாமங்களும் மாத்திரமே இருந்தன என்றும் ஆகையால் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களே சபைக்கு இருந்தனர் என்றும் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

ஆகவே ஒன்றை நாம் இவற்றிலிருந்து அறிகிறோம். சில மிகப் பெரிய தவறுதல்களின் மூலமாக இவைகள் நடந்திருக்கின்றன. நம்முடைய ரோமன் கத்தோலிக்க சபை கிரேக்க கத்தோலிக்க சபை, அவற்றுடன் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த சபை – இதுபோன்ற சபைகளைச் சேர்ந்த ஜனங்களுக்கு தாங்களும் அப்போஸ்தலர்களே என உரிமை கோரும் பேராயர்கள் உண்டு. இவ்வாறு அவர்கள் உரிமைக் கோருவது அதிகாரப்பூர்வமற்றதும், வேத வாக்கியங்களுக்கு முரண் பாடானதும் ஆகும்.

## தேவனுடைய வார்த்தை

**GOD'S WORD**

அப்போஸ்தலர் அல்லாதவராக இருந்தும் தங்களை அப்போஸ்தலர்கள் என்று உரிமைக் கோருபவர்கள் பொய் சொல்லுகிறார்கள் என இயேசுவே கூறுகிறார். கடந்த நூற்றாண்டு காலங்களின்போது நமக்குக் கற்பித்து கொடுத்து வந்த தப்பறைகளையும் பாரம்பரியங்களையும் நாம் ஒருபோதும் பின்பற்றலாகாது. ஆனால் நமது ஆண்டவராகிய இயேசு தாமே கூறியிருக்கிறவற்றையே பின்பற்ற வேண்டும். அவரிடத்தில் மாத்திரமே அதற்குரிய அதிகாரம் உண்டு. இவ்வாறு தப்பறைகளின் மூலமாகவும் பாரம்பரியங்கள் மூலமாகவும் ஒரு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டு செயல்பட்டு வரும் இப்படிப்பட்டவர்களிடம் ஓர் அளவிற்கு எங்களுக்கு அனுதாபம் உண்டு. இவர்கள் நமது ஆண்டவர் மூலம் நியமனம் செய்யப்பட்ட உண்மையான பன்னிரெண்டு பேர் எனவும் பல நூற்றாண்டு காலங்களாகவே தாங்களும் அப்போஸ்தலர்கள் எனவும் அவர்களைப் போலவே அதே ஆவியினால் ஏவப்பட்டிருக்கிறோம் என்றும் அதே அதிகாரத்தில் தான்

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

பேசுகிறோம் என போதித்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கவலைக்கிடமாக ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதால், அவர்களிடம் எங்களுக்கு ஓர் அளவு அனுதாபம் உண்டு. ஆனால் நாம் இயேசு என்ன கூறினாரோ அதனையே நினைவில் கொள்ள வேண்டும். சரியான நோக்கு நிலையை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். *"அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்திருக்கிறாய்"* நாங்கள் இரக்கமில்லாமல் பேசவில்லை. ஏனென்றால் இதுவே நமது ஆண்டவரின் வார்த்தைகள். *"சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக. என் வார்த்தையுள்ளவனோ என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக."* எரே. 23 : 28. நாம் மனிதருக்கு பயந்து ஒருவன் வேத வசனங்களோடு எதையாகிலும் கூட்டினால் அந்த பாவத்திற்கு இடம் கொடுப்பது போல நாமும் இந்த பாவத்தில் பங்கு பெறுவோம். வெளி. 22 : 18, 19.

ஒரு காலத்தில் செய்யப்பட்ட இந்த மாபெரும் உரிமைக் கோருதல்களெல்லாம் தள்ளப்பட்டுவிட்டன அல்லது குறைந்த பட்சம் இந்த வகுப்பார் முந்தைய காலத்தின் அதிகாரத்தோடு பேச முயற்சி செய்வதில்லை. இப்போது ஜனங்கள் நாளுக்கு நாள் அறிவொளியால் பிரகாசிக்கப்பட்டு வருவதால் எவராகிலும் இது போன்ற உரிமைகளைக் கோரினால் அது அர்த்தமில்லாத செயலாகத் தோன்றும். இருந்தபோதும் அப்போஸ்தலர் அல்லாத பொய்யர்கள் தாங்களால் மாத்திரமே ஒருவருக்கு பிரசங்கிக்க அதிகாரம் வழங்க முடியும் எனவும் தாங்கள் ஒருவருக்கு பிரசங்கிக்க அபிஷேகம் செய்யாவிட்டால் அவருக்கு நமது ஆண்டவரின் நாமத்தில் பிரசங்கிக்க எந்தவித உரிமையும் கிடையாது எனவும் கோரி வருகின்றனர். இது சரியே என உரிமை கோருகின்றனர். ஏனென்றால் அவர்கள் *"அப்போஸ்தல பேராயர்கள்"* என அழைக்கப்படுபவர்கள். எப்படி இருப்பினும் பழைய உற்சாகத்தோடு உரிமை கோரியது போல் இப்போது அதனை அழுத்தமாக கூறுவது கிடையாது. இதர சபை மூப்பர்கள் வினாவுவது என்னவென்றால் *"ஏன் எங்களை விட்டு தனித்து அகன்று நிற்கிறீர்கள்?"* அவர்களுடைய முழுமையான காரணங்களை கூறுவதற்கு அவர்கள் விரும்புகிறதில்லை. *"நாங்கள் தான் அந்த திருச்சபை; நாங்கள் தான் அதன் அப்போஸ்தலர்கள், நாங்கள் உங்களை அபிஷேகம் செய்யாவிடில் உங்களுக்கு பிரசிங்கிக்க எந்தவித உரிமையும் கிடையாது"* என்றெல்லாம் கூற இப்போது தயக்கம் கொள்கிறார்கள். அவர்கள் இப்போது ஊசலாடும் நிலையில் இருக்கின்றனர்.

## குருமாரைச் சார்ந்திருத்தல்

### CLERGY DEPENDENT

இது போன்று கடந்த காலங்களில் அப்போஸ்தலர் களின் வாரிசு உரிமையைக் கோரி வந்த சபைகள் தொல்லைகளுக்கும் குழப்பங்களுக்கும் ஆளாயின. இது போன்ற அவல நிலையிலிருந்து அவர்கள் இன்னமும் மீண்டு வரவில்லை. கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் இன்னமும் குழம்பிப்போய் இருக்கிறார்கள். சுமார் கி.பி.313 ஆம் ஆண்டிலிருந்தே இந்த அப்போஸ்தலர் வாரிசு உரிமை சமய கோட்பாடு போர் ஆரம்பமாகி தொடர்ந்து இருந்து வருகிறது. பிஷப்புகள் *"தேவனுடைய மந்தையை ஆதிக்கஞ்செலுத்த"* ஆரம்பித்தனர். இந்த அதிகார ஆதிக்கம் மிகவும் சிறிதள விலிருந்து படிப்படியாக தலைதூக்கியது. வழக்கமாக ஆதிக்கம் சிறிய அளவிலிருந்து பெருகுவது போல் இதுவும் இருந்தது. இது பிற்காலங்கள் வெளிவந்த அறிக்கையின்படி பொது மக்களை சமய அறிவு பெறாத *"பாமர ஜனங்கள்"* என்றும் திருச்சபையை *"குருமார்களே"* திருச்சபை எனவும் பாகுபாடு செய்து இந்த பொய்யான அப்போஸ்தலர்கள் ஒருவருக் கொருவர் ஐக்கியப்பட்டுக் கொண்டனர். இதில் பொதுவாக எல்லோரும் நம்பி வந்த கருத்து என்னவென்றால் பிஷப்புகள் தான் அப்போஸ்தலர்கள் எனவும் அவர்கள் நமதாண்டவரிட மிருந்து அதிகாரங்களைப் பெற்றிருந்ததாக எண்ணினார்கள்.

ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு சில நூற்றாண்டு காலங்களுக்கு முன்பு வரையிலும் வேதாகமத்தின் நகல்கள் மிக அரிதாக இருந்து வந்தன. உண்மையிலேயே வேத புத்தகம் கிடைப்பதற்கு அரிதான பொக்கிஷமாக இருந்தது. ஏனென்றால் அக்காலத்திலே அறிஞர்களால் மாத்திரமே கையால் மை கொண்டு அதனை எழுத முடிந்ததால் வேத புத்தகம் கிடைப்பது அரிதாகி இருந்தது. கன்றின் மெல்லிய தோல் போன்றவற்றில் அதனை அச்சிட வேண்டியிருந்தது. ஏனென்றால் அக்காலங்களின் போது அச்சு இயந்திரமோ, காகிதமோ கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு சிலரிடமே வேத புத்தங்கள் இருந்தன. அது மட்டுமல்ல அக்காலத்தில் ஒரு சிலரால் மாத்திரமே வாசிக்கவும் கூடுமானதாக இருந்தது. இத்தகைய சூழ்நிலையால் பொதுமக்கள் ஆலயத்தைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று. தாங்களே அப்போஸ்தல பிஷப்புகள் என்று உரிமை கோரத் தொடங்கினபோது தேவன் மூலமாக தங்களுக்கு மாத்திரமே வேத வசனங்களை வாசிக்கவும் அதற்கு வியாக்கியானம் செய்யவும் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று ஜனங்கள் புரிந்துக் கொள்ளும்படியாகச் செய்தனர்.

*"பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"* என்று இயேசுவானவர் தமது பன்னிரண்டு அப்போஸ்தலர்களைப் பார்த்து கூறினார். அவர்களின் எழுத்துக்கள் விசேஷமாக நமதாண்டவரால் மேற்பார்வை செய்யப்பட்டுவந்தன. அவர்களின் போதனை களும் ஆவியினால் ஏவப்பட்டு உரைக்கப்பட்டவைகளே. (2 கொரி. 12 : 7; கலா. 1 : 11, 12). தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாகத் தேவனுடைய வார்த்தைகள் நமக்கு போதுமானவைகளாக இருக்கும் என்று பரி. பவுல் நமக்கு உறுதியளிக்கிறார். (2 தீமோ. 3 : 16, 17). ஆகவே மேலும் கூடுதலாக எந்த வித போதனைகளும் நமக்கு அவசியமில்லை. உண்மையான பன்னிரெண்டு பேரை தவிர வேறு அப்போஸ்தலர்களும் இல்லை. யூதாசின் இடத்தை நிரப்புவதற்கு நமதாண்டவர் அப்போஸ்தலர் பவுலைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்து 1260 அடையாளமான நாட்கள் முடிவிற்கு வந்ததும், அதாவது 1260 ஆண்டுகளாக இருந்து வந்த போப்பு

மார்க்கத்தின் கொடுமையின் காலங்கள் முடிவிற்கு வந்ததும் வேதாகம சங்கங்களால் வேதாகமம் அச்சிடப்பட்டு தொலைதூர இடங்களுக்கெல்லாம் வினியோகம் செய்யப்பட்டன. கல்வி எல்லோருக்கும் பொதுவானதாக ஆனது. இப்படியாக இன்றைய நாட்களில் எல்லாராலும் வாசிக்கத்தக்க விதமாக வேதாகமம் எல்லா இடங்களிலும் மலிவான விலையில் கிடைக்கிறது.

## நிசேயா விசுவாசப் பிரமாணம்

### THE NICEAN CREED

நாம் கி.பி. 325 ஆம் ஆண்டிற்கு பின்னோக்கிச் செல்வோம். இக்காலத்தின்போது சபையில் இருந்து வந்த பிஷப்புகள் அப்போஸ்தல அதிகாரங்கள் தங்களுடையது என்று கோரி வந்தனர். அவர்கள் தங்களையே உயிரோடு இருக்கக்கூடிய அப்போஸ்தலர்கள் என முன்னிருத்தினார்கள். அவர்களுடைய போதனைகள் எல்லாம் தேவன் உபதேசித்திருப்பது எனக் கூறலானார்கள். ஆனால் ஆரம்ப காலங்களில் உண்மையான அப்போஸ்தலர்களிடையே இருந்து வந்த ஐக்கியம் போல் இந்த போலி அப்போஸ்தலர்களிடம் இசைவிணக்கம் இல்லை. எப்படியெனில் நமதாண்டவரால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் எழுதிய வேதப்பகுதிகளைப் படிக்கும்போது அவர்கள் அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டனர் என்பதை நாம் காண்கிறோம். கி.பி. 325-ம் ஆண்டின் போது ஒரு மாற்றம் ஏற்பட்டது. சமய விசுவாசத்தில் ஓர் நிலையான முடிவு எடுக்கப்பட்டது. நிசேயாவில் ஒரு சங்கத்தை சக்ரவர்த்தி காண்ஸ்டான்டைன் கூட்டுவித்தார். அவர் ஒரு உலக ஞானி என எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி கூறலாம். தன்னுடைய சாம்ராஜ்யத்தில் முன் அணியில் வந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களின் பக்கமாக தான் சேர்ந்து கொண்டால் நல்லதோர் வழிமுறையை கையாள முடியும் எனக் கருதினார்.

இந்த சக்ரவர்த்தி மரணமடையும் வரையில் ஞானஸ்நானம் பெறவில்லை. தன்னுடைய அரசியல் தந்திரத்திற்காக தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று மாத்திரம் பகிரங்கப்படுத்திக் கொண்டான். கி.பி. 325-ம் ஆண்டின்போது தன்னுடைய சாம்ராஜ்யத்தில் இருந்த சபைகளின் கண்காணிகள் அனைவருக்கும் நிசேயா என்னும் பட்டணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தான். அத்துடன் அதற்குரிய அத்தனை செலவுகளையும் தான் கொடுத்து விடுவதாக கூறினான். கிட்டத்தட்ட 384 கண் காணிகள் ஒன்று திரண்டு வந்தனர். இது மொத்த எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையே ஆகும். இவ்வாறு கூட்டப்பட்டச் சங்கம் முதன் முறையாக கூட்டப்பட்ட கிறிஸ்தவ சமய உலக மாநாடு ஆகும். இது அப்போஸ்தலர் களுடைய கூட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இவர்களிடையே மதப்போதனைகளால் ஒற்றுமையில்லை என்பதை சக்ரவர்த்தி கண்டு கொண்டான். இந்த பேராயர்கள் எல்லோரும் முழுமை யாக அங்கீகாரம் பெற்றவர்களாக இருப்பார்கள் என்கிற நம்பிக்கையின் பேரில் அவர்களை ஒன்று கூடிவரச் செய்து எது உண்மையான மதப் போதனை எது தவறானது என்று கண்டறிந்து அவர்களுக்குள்ளேயே ஓர் முடிவிற்கு வரும்படி கூறினான். பாரம்பரிய மதப் போதனைக்கு வித்தியாசமாக போதிக்கப்பட்டு வரும் மதப் போதனைகள் மதங்களுக்கு எதிரான கொள்கை என அறிக்கை இடும்படிக் கூறினான். தான் சபையில் சேர உத்தேசித்திருப்பதாகக் கூறினான். அவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர ஒத்தாசை செய்ய வேண்டும் என்றான். அப்போதுதான் கிறிஸ்தவ மதத்தில் இராத புறமதஸ்தர்கள் திரண்டு சபைக்குள் வருவார்கள் எனக் கூறினான். சக்ரவர்த்தி, அவர்களுடைய மதப் போதனைகளுக்கு தக்க ஆதரவு கொடுப்பதாகவும் கிறிஸ்தவ மதங்களை எதிர்ப்பவர்கள் யாவரையும் தண்டிப்பதாகவும் கூறினான்.

இவ்விதமாக நிசேயா விசுவாசப் பிரமாணம், மாபெரும் பிரமாணங்களுள் முதல் இடத்தைப் பெற்றது. தங்களைத் தாங்களே அப்போஸ்தல ஆயராக நியமித்துக் கொண்டவர் களால் இது கொண்டுவரப்பட்டது. ஆகவே பேராயர்களுக்கும் சக்ரவர்த்திக்கும் இடையேயான பாரமான கரம் ஒன்று படிப்பறிவில்லாத பாமர ஜனங்கள் மேல் விழுந்தது. சபை மூப்பர்கள் அவர்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். அதுவே வேதாகமத்தைப் படிப்பதற்குரிய வாய்ப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி இட்டது. அது முதற்கொண்டு வேதாகமத்தை படித்து பயன்படுத்திக் கொள்வதற்குரியத் தேவை முற்றிலும் அகன்றது. அவர்கள் நிசேயாவின் பிரமாணத்தை மாத்திரம் கடைபிடிக்க வேண்டியதாயிற்று. அவர்கள் அறிய வேண்டியிருந்த அனைத்தையும் அவர்களுக்கு போதிக்கத் தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் சரியாக அவர்களுடன் இருக்கிறார்களே.

## வேதாகமம் பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டது

### BIBLE REINSTATED

பொதுவான மக்களுக்கு கி.பி.325 முதல் கி.பி. 1525 ஆம் ஆண்டு வரை (ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு) வேதாகமம் அறியப்படாத ஒரு புத்தகமாக இருந்தது. 1526-ம் ஆண்டின்போது கல்விமானும் கிறிஸ்தவனுமாகிய பேராசிரியர் டின்டேல் (Tyndale) அவர்களுக்கு, கிறிஸ்தவ பேராயர்கள் கற்பித்து வந்த வேத போதனைகள் திருப்தி அளிக்கவில்லை. இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் போதித்து வந்த உண்மையான போதனைகளை ஜனங்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு அவர் கிரேக்க மொழியில் இருந்த புதியேற்பாட்டை ஆங்கில மொழிக்கு மொழிப்பெயர்த்தார். ஆங்கிலேய பேராயர்களின் எதிர்ப்பின் காரணமாக அவர் தமது மொழிப்பெயர்ப்பை அச்சிடுவதற்கு ஜெர்மனி நாட்டிற்குப் போகும்படி வற்புறுத்தப்பட்டார். அதன் பிறகு இந்த புதியேற்பாட்டு புத்தகங்கள் லண்டன் மாநகருக்கு இறக்குமதி செய்யப்பட்டன. மக்கள் இதனைப் பெற்றுக் கொள்ள ஆவலோடு எதிர்பார்த்து இருந்தனர். வேதாகம வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் ஜனங்களுக்கு வாசிப்பதற்காக கற்றுத் தேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன.

இதன்பிறகு பிஷப்புகள் என்ன செய்தார்கள் தெரியுமா? இந்த இயக்கத்தைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டனர். அச்சடித்துக் கொண்டு வரப்பட்ட அந்த அத்தனை பதிப்புகளையும் அவர்கள் வாங்கி வந்து பரிசுத்த பவுல் தேவாலயத்தின் முன் நெருப்பினால் சுட்டெரித்தார்கள். இன்றைய நாள் மட்டும் அது

ஓர் அடையாள சின்னமாக இருக்கிறது. இவர்கள்தான் இங்கிலாந்தின் சபையின் புராட்டஸ்டண்டு பேராயர்கள்! அவர்கள் உலக ஞானிகள். வேதாகமத்தில் அடங்கியுள்ள உண்மையான போதனைகளை பொது மக்கள் படித்து தெரிந்து கொண்டால் எத்தகைய விளைவு ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்திருந் தார்கள். அவர்களுக்கு இருந்துவரும் அதிகாரங்களும் செல்வாக்கும் விரைவில் அவர்களை விட்டு அகன்று போய்விடும். அத்துடன் பொதுமக்கள் விரைவில் கஷ்டமான கேள்விகளை அவர்களிடம் கேட்ப்பார்கள். பிற்காலத்தில் பேராசிரியர் டின்டேல் தமது கொள்கைக்காக உயிர்த் தியாகம் செய்தார்.

வேதாகமம் ஏன் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது என்று ஆச்சரியப்பட்டு ஒரு நாற்பது ஆண்டு காலத்திற்கு மக்கள் அதிருப்தி காட்டினார்கள். இறுதியாக பேராயர்கள் ஓர் முடிவெடுத்தனர். செயல் முறைக்கு ஏற்ப மக்களுக்கு வேதாகமம் வழங்க வேண்டும் என முன்வந்தனர். ஆகவே ஒரு சிறப்பு பிரதியை உருவாக்கினார்கள். அவர்கள் அதனை *"பேராயர்களின் வேதாகமம்" (The Bishop's Bible)* என்று அழைத்தனர். இதனை அவர்கள் பொது மக்களுக்கு வழங்கும்போது, எவராகிலும் பிஷப்புகள் கொடுக்கின்ற விளக்கங்களுக்கு மாறாக விளக்கம் கொடுத்தால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படும் எனக் கூறி எச்சரித்தனர். சதாகாலமும் எரிந்து கொண்டிருக்கும் எரிநரகத்திற்குத் தள்ளப்படுவது உறுதி என அச்சுறுத்தினர். இப்படியாக அடுத்த காலக்கட்டத்தில் கத்தோலிக்க பேராயர்கள், புராட்டஸ்டண்டு பேராயர்கள் செய்த பிரகாரமே இவர்களும் செய்யும்படி நடைமுறையில் வற்புறுத்தப்பட்டார்கள். அதன்படி *"கத்தோலிக்கருக்காக டூவே மொழிபெயர்ப்பு"* வேதாகமம் அதே போன்று எச்சரிக்கைகளுடன் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. இதன் விளைவாக வேதாகமத்தின் செல்வாக்கு பெரும் அளவில் மதிப்பற்றதாக்கப்பட்டது.

ஆனால் வேதாகமத்தை முற்றிலுமாக கீழ் அடக்கிப் போடக் கூடாமல் போயிற்று. பிற்காலத்தில் வேதப்பகுதிகள் முழுவதும் பல்வேறு பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திற்குப் பின்னர் கல்வி எல்லோர் மத்தியிலும் பரவலாக ஆரம்பித்தது. வேதாகமச் சங்கங்களும் பெரிய அளவில் வளர்ந்து பரவலாயின. (மேரி ஜோன்ஸும் அவளுடைய வேதாகமமும் என்ற புத்தகத்தைப் பார்க்கவும்) இதுவரை கண்டிராத விதத்தில் ஜனங்கள் தங்களுக்காக வேதாகமங்களை வாங்கிப் படிக்கலானார்கள். அது முதற்கொண்டு மூட பழக்க வழக்கங்கள் படிப்படியாக உடைந்து ஜனங்களுக்கு சிந்திக்கத் தைரியம் வந்தது. என்றாலும் சிலர் இன்னமும் மூட பழக்க வழக்கங்களால் கட்டுண்டு இருக்கின்றனர். ஆனால் அவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. இப்போது இருந்து வருகிற சமய போதனைகள் முட்டாள் தனமானவை. புத்திக்கூர்மையான எந்த தேவ ஊழியக்காரனும் தன் சொந்த சபையில் உள்ள மத போதனைகளுக்கு பாதுகாப்பு கொடுக்க சற்று யோசிப்பான் என்று நாங்கள் நம்புகிறோம்.

## மாபெரும் வீழ்ச்சி

### THE GREAT FALLING AWAY


ரோம கத்தோலிக்க சபையின் போதனை என்னவென்றால் அவர்களின் எல்லா ஜனங்களும் மரணத்திற்குப் பின்னர் உத்தரிப்பு ஸ்தலத்திற்கு போவார்கள் என்பதே ஆகும். கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த எவரும் பரலோகத்திற்குச் செல்வான் என எதிர்பார்க்க கூடாது. உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள பாடுகளை முதலில் அனுபவித்து பரலோகத்திற்குச் செல்ல தகுதி பெற்றுக் கொள்ள வேண்டும். கத்தோலிக்க மதக்கட்டுபாடுகளின்படி ஒருவர் அந்த மதத்திற்கு எதிரான கொள்கையை உடையவராக இருப்பாரேயாகில் அவர்களின் பார்வையில் அவர் மிகவும் கேடு விளைவிக்கும் மகா பாவங்களைச் செய்தவராக கருதப்படுவார். இவ்வாறு மதப் போதனைகளுக்கு எதிரானவர்கள் கத்தோலிக்க மத நம்பிக்கையின்படி இவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்கு போக மாட்டார்கள். ஆனால் சதா காலத்திற்கும் எரி நரகத்திற்குள் தள்ளப்பட்டு வாதிக்கப்படுவார்கள். ஆகவே கத்தோலிக்க மார்க்கத்தில் அதிக பக்தி வைராக்கியம் கொண்டவர்கள், அவர்களின் மதத்தை எதிர்த்து நிற்பதில் அதிக அச்சம் கொண்டவராக இருப்பார்கள். இதுபோன்ற முட்டாள்தனம் எத்தனை உபத்திரவங்களுக்கு காரணமாக இருந்திருக்கிறது! இவை யாவற்றையும் வேதாகமம் முன்னதாகவே அறிவித்திருக்கிறது. *"அநேகர் பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங் களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்"* என்று பவுல் அப்போஸ்தலர் அறிவிக்கிறார் (1 தீமோ. 4 : 1-3; அப். 20 : 29, 30). சாத்தான் மற்றும் அவனுடைய விழுந்து போன தேவ தூதர்களாகிய வஞ்சக ஆவிகளைத் தான் நாங்கள் குற்றஞ் சாட்டுவோம். நாங்கள் நம்முடைய கத்தோலிக்க மற்றும், எப்பிஸ்கோப்பலியன் சபை நண்பர்களையோ அல்லது வேறு கூட்டத்தாரையோ மோசம் செய்ய முயற்சித்தார்கள் என கோரவில்லை. ஆனால் பவுல் அப்போஸ்தலரோடு கூட நாங்களும் இவர்கள் அந்த மாபெரும் எதிராளியாகிய சாத்தானால் ஏமாற்றப்பட்டிருப்பதையே கூற முற்படுவோம். இந்த போலிப் பிரமாணங்கள் போதிக்கிறபடி அன்பு நிறைந்த தேவன் தம்முடைய சிருஷ்டிகளுக்கு இப்படிப்பட்ட திட்டத்தை ஏற்படுத்தமாட்டார் என நாங்கள் பார்க்கத் தொடங்கியிருக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளின் மீது இதற்கு முன்னர் ஒருபோதும் கண்டிராத அளவிற்கு அதிக வெளிச்சம் பிரகாசிக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மகிமையான புதிய யுகத்தின் உதய காலத்தில் நாம் ஜீவிக்கிறோம். நாம் இப்போது வேதாகமத்தில் சொல்லியிருக்கிறபடி *"குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம்"* என்று கூறியிருக்கும் காலத்தை நெருங்கி வந்து கொண்டிருக்கிறோம். தேவனுக்கு நன்றி கூறுவோமாக! ஏசா. 35 : 5.

## அர்மகெதோன் அருகே இருக்கிறது

### ARMAGEDDON HERE

தற்காலத்தின் பொதுவான புரட்சி, அராஜகம் மற்றும் உலகளாவிய அமைதியில்லா நிலை ஆகியவை வேதாகமம் குறிப்பிடுகிற அர்மகெதோனின் பயங்கரமான வளர்ச்சியின் வெளிப்படையான அத்தாட்சியாகும். (வெளி. 16 : 16-20). அது இதுவரையிலும் தேவனுடைய ஜனங்களை அடக்கி ஆண்டு வந்த தப்பறைகளின் ஒழுங்குமுறைகள் எல்லாம் முற்றிலுமாக நிர்மூலமாக்குவதில் முடிவடையும். ஒவ்வொரு வகையிலும்

இருந்து வந்த சகல அக்கிரமங்களும் இல்லாதபடிக்கு அகன்று போகும். இவ்வுலகத்தை விடுவிக்கவும் நிலை யான நீதியை ஸ்தாபிக்கவும் மேசியாவின் மகிமையான ராஜ்யம் அருகில் நெருங்கி வந்து, இப்பொழுது பூமியில் ஸ்தாபிதமாகும் நிலைக்கு வந்திருக்கிறது. தற்போதைய உலகளாவிய குழப்பங்கள் அதிக காலங்களுக்கு நீடிக்காது என நாங்கள் நம்புகிறோம். இதுபோன்ற தொல்லைகள் இவ்வுலகில் மகா உபத்திரவக் காலங்கள் வரும் மட்டும்தான் நீடிக்கும். இந்த மகா உபத்திரவக்காலம் அதனுடைய எல்லா வேகத்தோடும் சடுதியாக நடைபெறும். (தானி. 12 : 1). எல்லா தேசங்களும் அதிவேகமாக தங்களைத்தானே ஏழ்மை நிலைக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கிறன.



DISTRESS OF NATIONS — Luke 21: 25, 26

உலக நாடுகள் எல்லாம் தாங்கள் பெற்ற கடனைத் தீர்க்க முடியாதபடி இருக்கின்றன. இதில் பெரிய கூட்டமைப்புகள் (கிறிஸ்லர், ஜெனரல் மோட்டார் போன்ற கம்பெனிகள்) வங்கிகள், ஆயுள் காப்பு நிறுவனங்கள், பொருளாதார கூட்டமைப்புகள் ஆகியவைகளும் இதில் அடங்கும். சில தனிப்பட்ட மாநிலங் களும், மாகாணங்களும் சம்பள பட்டுவாடாவை செய்ய இயலாது இருக்கின்றனர். நாடுகள், இப்போது எங்கும் ஊடுருவிக் கொண்டு வரும் அழிவைத் தவிர்ப் பதற்கு யுக்திகளைக் கண்டுபிடிப்பதில் முயற்சி செய்து வருகின்றன. கடந்த 100 ஆண்டுகளாக "நாம் அழிந்து தான் வெற்றி வாகை சூட வேண்டும்" என்பதே போர் முழக்கமாக இருந்து வந்திருக்கின்றன. அது நம்மை இந்த இடத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. இவை யாவும் எவ்வாறு முடிவுரப் போகிறது என்பதை நாம் காணப் போகிறோம். நாம் வேதாகமத்தைச் சார்ந்து இருப்போமாக. இந்த எல்லா தேசங்களும் அதி விரைவில் அகன்று போய்விடும். எதேச்சாதிக்காரம் செய்யும் எந்த ஒரு ராஜ்யமும் ஐரோப்பா முழுவதும் விட்டு வைக்கப்பட மாட்டாது.

எந்த ஒரு நாடும் உண்மையிலேயே கிறிஸ்துவைப் பின்பற்றியது கிடையாது. அவர்களுடைய நடத்தையே அதனைத் தவறாமல் காட்டுகிறது. ஒவ்வொருவரும் அகில உலக பொதுச் சட்டத்தை மீறுகிறார்கள். சிறிதளவு நிலப்பரப்பை தங்களுடைய நாட்டுடன் கூட்டிக் கொள் வதற்கும், வியாபார ரீதியில் ஆதாயம் தேடிக் கொள்வ தற்கும், அநேக ஆயிரம் மக்களின் உயிர்களைப் பணையம் வைத்து இவர்கள் பேரம் பேசுகிறார்கள். சுயநலம் அளவு கடந்துவிட்டது. சட்டதிட்டங்களை மீறுவதே அராஜக மென்றால் நாம் ஏற்கனவே தேசங்களின் மத்திலுள்ள அராஜகத்தில்தான் இருக்கிறோம். *"இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய"* சாத்தானின் ஆளுகையின் கீழ்தான் அவர்களெல்லாரும் இருக்கிறார்கள். வேதாகமம் *"ஒவ்வொரு மனித னுடைய கையும் தன் அயலானுக்கு விரோதமாக இருக்கும்,"* என்று அதிவிரைவில் நடக்கப் போகிறதை அறிவிக்கிறது.

ஆண்கள் மற்றும் பெண்களின் பாவம் மற்றும் சுயநலத்தினிமித்த மாகவே இந்த பயங்கரமான உபத் திரவம் வந்தாக வேண்டும். தற்காலிக ஒழுங்கு முறைகளின் அழிவுகளின் மீது தேவனுடைய நேச குமாரனின் ராஜ்யம் வரும் என்று தேவனுடைய வார்த்தைகள் குறிப்பிடுகின்றன. இதற்காக நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். (தானி. 2 : 44)! மனிதனின் கேடான இறுதி நிலை தேவனுக்கு ஏற்ற வாய்ப்பைக் கொடுக்கும் தருணமாக இருக்கும். மேசியாவின் குரல் கேட்கப்படலாம். அவர் *"இரையாதே அமைதலாயிரு"* என உத்தரவு பிறப்பிப்பார். அப்போது அலைகடல் போல் கொந்தளித்துக் கொண்டு வரும் ஜனத்திரள் அமைதிக்கு வரும். அவர்களின் கொந்தளிப்பு அடங்கும். தேவன் ஒழுங்கின்மையிலிருந்து யாவற்றையும் ஒழுங்கிற்குக் கொண்டு வருவார். மனுக்குலமானது நம்பிக்கையின்மையின் உச்ச நிலையை அடையும்போது அவர்களுக்கு விடுதலை வரும். அப்பொழுது அவர்கள் ஆண்டவரை நோக்கி கதறத் தொடங்குவார்கள். அப்போது அவர் அவர்களுக்கு உதவிச் செய்வார். தேவனுடைய ராஜ்யம் உலக விவகாரங் களின்மேல் முழு அதிகாரம் பெறும். அது *"சகல ஜாதிகளுக்கும் விருப்பமானது"* என்பதை நிரூபிக்கும். (ஆகாய். 2 : 7)

* * *




# மிலேத்துவில் பவுல்

**PAUL AT MILETUS**

*"வேத வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடத்தையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பிரதிபலியுங்கள்." – எபி. 13 : 7; டயக்லாட் மொழிபெயர்ப்பு, அப். 20 : 22-35.*

பவுல் அப்போஸ்தலரிடம் காணப்படுகிற நீதியின் மேல் கொண்ட தைரியத்துக்கு முன்பாக நாம் பிரமித்து நிற்கிறோம் : மேலும் இந்தப் பாடத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்ட பகுதியானது இதை பிரத்தியேகமாக வெளிப்படுத்திக் காட்டும். அவரை நாம் அவர் சென்ற ஒவ்வொரு நகரத்திற்கும் பின்தொடரும் போது, அவருடைய விசுவாசமுள்ள ஊழியத்தையும், பொறுப்பையும், துன்பப்படும்போது அவர் பொறுமையோடு சகித்ததையும், உற்சாகத்தோடு சத்தியத்துக்காக சலிக்காமல் தன்னை அர்ப்பணித்ததையும், பலவீனமுள்ளவர்களுக்கும், அறியாமையுள்ளவர்களுக்கும் உபதேசிக்கும்போது அவருடைய பொறுமையையும், கிறிஸ்துவின் நிமித்தம் அவர் பட்ட பாடுகளையும் கவனிக்க முடியும், பின்னர் *"இவைகளில் ஒன்றும் என்னை அசைக்கவில்லை"* என்ற அவருடைய வார்த்தையை கேட்க முடிகிறது; இதன் மூலம் நாம் உண்மையில் ஒரு மேலான பாத்திரத்தை ஆழ்ந்து சிந்திக்க போகிறோம் என்பதை உணர முடிகிறது.



*"சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக"*
*அப். 22:13*

பவுலை ஒரு விசேஷமான நபர், வியக்கத்தக்க மாமனிதர் என்று மாத்திரம் கூறுவது அவருடைய பாத்திரத்துக்கு போதுமான கருத்தைக் கொடுப்பதாக இல்லை. ஒவ்வொரு நகரத்திலும் கட்டுகளும், பெருந்துன்பங்களுமே அவரை எதிர்நோக்கியிருந்தன என்பதைக் கவனிக்கவும். கலகக்காரர்களும், சவுக்கடிகளும், சிறைவாசமுமே அவருடைய மாறாத எதிர்பார்ப்புகளாயிருந்தன. பின்னர் அவருடைய நிரூபங்களை வாசித்து, அவருடைய ஊக்கமுள்ள ஆவியையும், தேவனுடைய காரியங்களில் அவருடைய ஆழ்ந்த அறிவையும், சபைகளின் மேல் அவருக்கிருந்த அக்கறையையும், அவைகள் ஆவிக்குரிய வளர்ச்சியடைய அவருக்கிருந்த ஆழ்ந்த அக்கறையையும், நம்பிக்கையூட்டுகிற அவருடைய புத்திமதிகளையும், அவருடைய மாதிரியான வாழ்க்கையையும் காண முடிகிறது. அவருடைய உயர்ந்த மாதிரியில் உள்ளுணர்வு முழுவதுமாக தூண்டப்படும் வரை வாசித்து, அவரை தேவ தயவு பெற்றவராக ஆச்சரியத்துடன் பார்ப்போம்.

சாதாரண நம்பிக்கைகளோ, குறிக்கோள்களோ இது போல் வாழ அவருக்கு ஊக்கமளித்திருக்க முடியாது. அவருடைய விசுவாசக் கண்கள் காணப்படாதவைகளின் மேல் இருந்தது. அவர் மேலான நன்மையும், ஆசீர்வாதத்தையும் உடைய மனிதராக மட்டுமல்லாமல், ஏறக்குறைய இதற்கு முன் சம்பவித்திராத துன்பத்தினையும் உடைய அசாதாரணமான நபராவார். *"பின்பு அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்"* (1 கொரி. 15 : 8) என்ற வார்த்தையின் மூலம் அவர் ஆண்டவரை அவருடைய மகிமையில் கண்டிருக்கிறார்; மேலும் *"சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்"* என்று அவருடனே பேசின இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையான சத்தத்தையும் கேட்டிருக்கிறார். அனனியா என்பவன் பவுலை நோக்கி *"நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்து கொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்கு சாட்சியாயிருப்பாய்"* என்று கூறினான். (அப். 22 : 12-16). அவர் தரிசனத்தில் *"மூன்றாம் வானம் வரை கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சிக் காலம்வரை எடுக்கப்பட்டார்"*. மேலும் ஒரு க்ஷண நேரத் தரிசனத்தில் அந்த நீதியின் ஆளுகையின் மகிமையையும், பேரின்பத்தையும் காண அனுமதிக்கப்பட்டார். திரும்பத் திரும்ப விஷேசமான, தனிப்பட்ட உற்சாகத்தை ஆண்டவரிடமிருந்து அவர் பெற்றார். கொரிந்துவிலே ஆண்டவர் பவுலிடம் *"நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு"* என்று தரிசனத்தில் பேசினார். (அப். 18 : 9, 10). மறுபடியும் பயங்கரமான கலகத்தின் மத்தியில் *"கர்த்தர் பவுலின் அருகே நின்று : பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல் ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும் என்றார்."* (அப். 23 : 11). மறுபடியும் கப்பற்சேதமாகிய ஆபத்தின் போது உடனடியாக தேவனுடைய தூதனானவன் அவனிடத்தில் வந்து நின்று *"பவுலே,*

*பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றார்."* (அப். 27 : 23, 24). ஜனங்களை அதிகமாக நம்பச் செய்யக் கூடிய அற்புதத்தின் மூலமாகவும், அடையாளத்தின் மூலமாகவும் தேவன் பவுலோடு கூட சுவிசேஷத்தின் சத்தியத்துக்காக அடிக்கடி சாட்சிக் கொடுத்திருக்கிறார். (அப். 19 : 11, 12; 20 : 9-12; 28 : 3-6, 8, 9).

இந்தக் காரியங்களின் இந்நோக்கில் பார்க்கும் போது, பவுல் நேர்த்தியாக அற்புதம் செய்யக்கூடியவர் என்று உறுதியாக கூற முடியாதல்லவா? *"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு."* என்று அவரே கூறியிருக்கிறார்; (பிலி. 4 : 13); மேலும் தன் மேல் தங்கியிருக்கிற கிறிஸ்துவின் வல்லமையே இவற்றைச் செய்கிறது என்று கூறுகிறார். (2 கொரி. 12 : 9, 10). இந்த பாரமான ஊழியத்தைச் செய்வதற்கும் இடைவிடாமல் தொடர்ந்து தேவனைக் குறித்து புறஜாதியாகிய நம்மிடம் அன்பான சாட்சி கூறுவதற்கும் அவருக்கு கொடுக்கப்பட்ட கிருபை போதுமானதாக இருந்தது. இவருடைய பிரகாசமான இந்தப் பாதையைப் பார்க்கும் போது, அவரில் நாம் கிறிஸ்துவைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம், ஒருவர் தேவனைக் கண்டும் அவருடைய மகிமையான சத்தத்தைக் கேட்டும், இதே போல் அவரோடு கூட வாழ்ந்தும், அவரோடு கூட தொடர்ச்சியாக மற்றும் நெருக்கமாக நல்லுறவு வைத்திருப்பவர்கள் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் ஊக்கமளிப்பார்கள், மேலும் பெருந்துன் பத்தினை சந்தோஷத்தோடே சகிக்க தைரியமூட்டும், பூமிக்குரிய பொக்கிஷத்தில் ஏற்பட்ட இழப் பையும், வலியையும் ஈடு செய்வ தாய் இதற்கு கிடைக்கும் வெகுமதியானது உண்மையில் மகிமையுடையதாய் இருக்கும்.



மிலேத்துவில் பவுல் அப். 20:17

நாம், இயேசு மற்றும் பவுல் ஆகயோரின் சிறந்த மாதிரியைக் குறித்துக் கொண்டு, பவுல் செய்தது போல் தேவை யான எல்லா பெலத்துக்காகவும், ஆறுதலுக்காகவும் இயேசுவை நோக்கிப் பார்த்து, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவோம். நம்முடைய பாடத்திற்கு மறுபடி யும் வருவோம். பவுல் பிரிந்து எருசலேமுக்குப் போகும் முன், அவரை வழியனுப்ப வந்த எபேசு சபையின் மூப்பர்களைக் கூடி வரச் செய்து, அவர்களுக்கு அவர் கொடுத்த ஆலோசனைகள், அவருடைய விசுவாசத்தை மற்றொரு முறை நினைவுப்படுத்துவதாயும், நாம் பிரதி பலிக்கத்தக்கதாக ஒரு சிறந்த முன்மாதிரியையும் நாம் பார்க்க முடிகிறது.

*"இதோ நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதை கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்க மாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினால், எல்லாரு டைய இரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக் கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சியாக வைக்கிறேன்."* (அப். 20 : 25-27). (எசே. 33 : 7-9-ல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தின்படி, பவுல், தேவனுடைய உக்கிராணக்காரனாக தன்னுடைய தனிப்பட்ட பொறுப்பைப் பற்றியும் அதன் முக்கியத்துவத்தையும் எப்போதும் தன் மனதில் வைத்திருந்தார்.)

பவுலின் பார்வையில் சத்தியத்தைப் பிற மனித தத்துவங்களோடு கலந்து அதை யூதர்களுக்கோ புறஜாதிக்கோ பிடித்தமானதாக ஆக்குவதற்கு சத்தியத்தை ஒருபோதும் சமரசம் செய்ததில்லை. தவிர்க்க முடியாமல் வரும் பெருந்துன்பத்தின் அளவை குறைப்பதற்காகவே நிராகரிப்பதற்காகவோ அவர் ஒரு போதும் சத்தியத்தை சமரசம் செய்ததில்லை. இத்தகைய சூழ்நிலையின்கீழ் இப்படிப்பட்ட சாட்சியை உண்மையாகவே அளிக்கக்கூடிய கிறிஸ்தவ போதகரே உண்மையான சிலுவை வீரன் ஆவார்.

இத்தகைய மூப்பர்கள் தொடர்ந்து தங்களுடைய சொந்த ஊழியத்தை அப்போஸ்தலர்களின் ஊழியத்தோடு இசைவுப்படுத்தும்படியாக பவுல் அப்போஸ்தலன் ஒரு தகப்பனைப் போன்று கொடுத்த ஆலோசனைகளைக் கவனிக்கவும்; மேலும் இதே உற்சாகத்துடனும் ஜாக்கிரதை யுடனும் அவரே அவர்களுக்கு மாதிரியை முன் வைத்தார். (அப். 20 : 28-31). மேலும் அவர்கள் மத்தியில் கண்டிப்பாக விருத்தியடையப் போகும் கள்ளப் போதகர்களுக்கு எதிராக அவர் கொடுத்த உண்மையான எச்சரிப் பையும்; மந்தையை பாதுகாக் காமல், சுயநலமாக தங்களின் சொந்த தற்காலிக முன்னேற்ற த்தை நோக்கும் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களுக்கு எதிராக வும் அவர் கொடுத்த எச்சரிப் பையும் கவனிக்கவும். இன்றைய காலக்கட்டத்தில் உள்ள போதகர் கள் கொடுக்கும் ஆலோசனை போல் ஓநாய்களை அன்பாக கையாளுமாறு அப்போஸ்தல னாகிய பவுல் புத்தி கூறவில்லை. அவர்களை எல்லாம் சகோதரர் என்று அழைக்க வேண்டு மென்றோ, நம்மைப் போல் அவர்களும் கிட்டத்தட்ட மிக அருகில் இருக்கிறார்கள் என்று அவர்களிடம் கூற வேண்டுமென்று பவுல் கூறவில்லை. அல்லது வீணான எல்லா வித வேதாந்தங்கள் மீதும் இது போன்றவை மீதும் இத்தகைய பரந்த விரிவான அன்பு உங்களுக்கு இருக்கிறது என்று அவர்களிடம் கூறும்படியாகவும் அவர்

கூறவில்லை. இத்தகைய விஷயங்களில் பவுல் சமரசம் செய்து கொள்ளக்கூடிய நபர் அல்ல. (ரோம. 16 : 17, 18;2 தெச. 3 : 6, 14; 2 கொரி. 6 : 14-18; 2 தீமோ. 2 : 15-19.)

சிறந்த கிரியைகள் பற்றிய பேச்சும் உற்சாகப்படுத்தும் முன்மாதிரியான வாழ்க்கையும் அன்பு கூறக்கூடிய இருதயத்தின் ஆசீர்வாதங்களையும் சுகந்த வாசனை வீசக்கூடிய அர்ப் பணிக்கப்பட்ட பரிசுத்த ஜீவியத்தைப் பற்றியும் அப். 20 : 32-35 வசனங்களில் கூறப்பட்டுள்ள இருதயத்தைத் தொடக்கூடிய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

நீதிமானுடைய ஊக்கமான ஜெபம் மிகுந்த பலனுள்ள தாகும். அந்த நேரத்திலும், தேவையான எந்த நேரத்திலும் தெய்வீக இரக்கத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட உணர்வால் அவர்களெல்லாருடைய இருதயங்கள் புதிப்பிக்கப்பட்டு தேற்றப்பட்டிருக்கும் என்பதில் நாம் சந்தேகங்கொள்ளத் தேவையில்லை. அவர்களுடைய இறுதியான வெகுமதி கிடைக்கும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாள் வரையில் இனி ஒருபோதும் சந்திக்கப் போவதில்லை என்று பிரிவைக் குறித்த நினைவு வந்தவுடன் கண்ணீர் பெருக்கெடுத்தது. நமது பாடத்தின் தலைப்பு வாக்கியத்தின் *"பொதுவான மொழிபெயர்ப்பு"* நமது ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகளுக்கு முரண்பாடாக கருத்துக் கொடுத்திருப்பினும் அது ஓர் சிறந்த தேர்வு ஆகும். (மத். 20 : 25-28; 2 கொரி. 1 : 24; 1 பேது. 5 : 1-3). தேவன் தம்முடைய ஜனங்களின் சபைகளின் மத்தியிலிருந்து ஆளுகை செய்பவர்களை ஒருபோதும் எழுப்பமாட்டார். ஆனால் உண்மையுள்ள தலைவர்களை எழும்பப் பண்ணுவார். அவர்களை மிகுந்த ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். அவர்களுடைய விசுவாசமும் மாதிரியும் பிரதிபலிக்கப்பட வேண்டும். * * *

# அர்ப்பணிக்கப்பட்ட பலி

## மேசியா – தேவனுடைய தாசன்

**THE MESSIAH - GOD'S SERVANT**

*"அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள். ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல அவருக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்."(சகரி. 12 : 10). (லீசர் மொழிப்பெயர்ப்பு)*

மனந்திரும்பிய இஸ்ரவேலர்கள் சிறந்த உடன்படிக்கை யின்கீழ் அவருடைய இரட்சிப்பினிமித்தம் தேவன் அருளிய நிறைவேறுதலான பஸ்கா ஆட்டுக்குட்டி சம்பந்தமாக சாட்சி கூறுவார்கள். இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலைப் பெறச் செய்ததைக் காட்டிலும் மாபெரும் இரட்சிப்பாக இது இருக்கும். (எரே. 31 : 31-34; ஏசா. 44 : 22, 23). அவர் எதிர்க்காமலேயே பாடுபட்டார் என்பதை அவர்கள் அறிவிப் பார்கள். (ஏசா. 53 : 7). *"அவர் நெருக்கப்பட்டிருந்தார்."* [நெருக்கடிப்படுத்தப்பட்டது (இதே எபிரேய வார்த்தையாகிய நாகாஸ் (Nagas) உபா. 15 : 2, 3 ஆகிய வசனங்களில் தண்டுதல், நெருக்கடி பண்ணுதல் என்ற வினைச் சொல்லால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). ஆதாமுடைய கீழ்ப்படியாமை யினால் இழந்த அவனுடைய பரிபூரண ஜீவனின் நிமித்தமாக தேவனுடைய நீதி திருப்தி செய்யப்பட வேண்டியிருந்தபடியால் அவனுக்காக சரிநிகரான மரண தண்டனைக்காக அவர் நெருக்கப்பட்டார்]. *"அவர் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை."* [அவர் தம்மை முழுமையான மரண தண்டனைக்கும் அத்துடன் அதன் அடிப்படையில் வரும் துயரங்களுக்கும் தம்மை முழுமையாக ஒப்புக் கொடுத்தார். இது போன்ற பாடுகளை அவர் நமக்காக சுமந்தார்.] *"அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்".* தம்மை துன்புறுத்தி யவர்களால் கொடூரமும் அநீதியுமான முறையில் நடத்தப்பட்டார். யாருக்காக அவர் மரிக்க முன்வந்தாரோ அவர்களிடமிருந்தே அவருக்குக் கடுமையான வேதனை கிடைத்தது. – அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் அவர் தம்மை பாடு மரணங்களுக்கு ஒப்பு கொடுத்தார். ஆயினும் அவர் சாந்தமுள்ளவராய் தம்மைத்தாமே கட்டுப்படுத்தி பிதாவின் சித்தத்தின் படிச் செய்ய பிரியமாயிருந்தார். (சங். 40 : 8). எல்லாரும் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்காகவும், யாவரும் தேவனுடன் இசைந்து இருக்க அவர்கள் திரும்பிவர அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறதற்காகவும் எல்லாருக்காகவும் தம்முடைய ஜீவனை ஈடுபலியாக கொடுப்பதில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். தேவனுடைய நீதியுடைய தாசனிடமிருந்து எப்பேற் பட்ட வியக்கத்தகுந்த உதாரணம் நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. அவரோ பிறரால் வையப்படும்போது பதில் வையாமல் இருந்தார். அவர் பாடுபடும்போது எவரையும் அவர் பயமுறுத்தவில்லை. அவர் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிற வருக்குத் தம்மை ஒப்புவித்தார்! தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும் கூட அவர் தேவனிடத்தில் விண்ணப்பித்தார்.

### மேசியா வன்முறையாக எடுத்துக் கொள்ளப்பட்டார்

**MESSIAH VIOLENTLY TAKEN AWAY**

"இடுக்கணிலும் [துன்பத்திலும், வற்புறுத்தி அடக்குவதிலும்] நியாயத்தீர்ப்பிலுமிருந்து (எபிரேய வார்த்தை மிஸ்பட் (misphat) இது இயேசுவானவரை சிலுவையில் அறைவதற்கு முன்னர் அந்த இரவில் நடந்த போலி நீதி விசாரணையைக் குறிக்கும். அச்சந்தர்ப்பத்தின் போது அவர் தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரணத்திற்கு ஏதுவானவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டார். தம்மைத் துன்பப்படுத்திய எதிராளிகளின்

கைகளிலிருந்தும் வழங்கப்பட்ட தண்டனையிலிருந்தும் மரணத்தின் மூலம் திடீரென்று எடுத்துக் கொள்ளப்பட்டார். (சிறையிலிருந்து அல்ல, எப்படியெனில் அவரை சிறையில் போட்டு அடைக்கவில்லை ARV: AV-ல் வரும் குறிப்பை கவனிக்கவும்). இவ்விதமாகத்தான் அவரை மரணத்திற்கு உட்படுத்தினர்].அவர் (வன்முறையாக) எடுக்கப்பட்டார். (எபிரேய வார்த்தை laqach லகாக் என்ற எபிரேய வார்த்தை 2 ராஜா. 2 : 10; எரே. 48 : 46-லும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.) *"அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்."* (ஏசா. 53 : 8).


லூக்கா 23:50-55

நிறைவேறுதலான பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய, இஸ்ரவேலரின் மேசியா தமது இளம் வயகில் அதாவது $33\frac{1}{2}$ வயதில் நிசான் அல்லது ஆபீப் மாதம் 14-ம் நாளின் போது அடிக்கப்பட்டார். (யாத். 12 : 5, 6, 18; லேவி. 23 : 5). இது பொதுவாக கி.பி. 33 என அறிவிக்கப் பட்டிருக்கிறது. எப்படியெனில் (தானி. 9 : 24-27) எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப் படுவது முதல் [இது கி.மு. 455-ன் பிற்பகுதி முதற் கொண்டு பிரபுவாகிய மேசியா வரும் வரையுள்ள காலங்கள் அடையாளங்கள் மூலம் குறிப்பிட்டுள்ள 69 வாரங்களாகும். அல்லது (69 x 7) 483 ஆண்டுகளாகும். (ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருஷத்தைக் குறிக்கும். எசே. 4 : 6) ஆகவே இஸ்ரவேலருடைய எழுபதாவது வாரமாகிய ஆண்டு கி.பி. 29-ன் பிற்பகுதியில் ஆரம்பமாகியது. (அதாவது கி.பி. $28\frac{3}{4}$ வருஷங்கள் ஆகும். இத்துடன் கி.மு. $454\frac{1}{4}$ ஆண்டினைக் கூட்டுகையில் கி.மு.455-ல் பிற்பகுதிக்கு வரும் அதாவது மொத்தம் 483 ஆண்டுகளாகும்) கி.பி.36-ம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த எழுபதாவது வாரம் முடிவுற்றது. அடுத்து இந்த 70-வது வாரத்தில் *"மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல."* இந்த வாரத்தின் மத்தியில் அது நடக்கும். [கி.பி.33, நிசான் 14-ல் மேசியா ஓர் ஆட்டுக்குட்டியைப்போல் கொண்டு போகப்பட்டு நிறைவேறுதலான பஸ்கா ஆட்டுகுட்டியாக அவர் சங்கரிக்கப்படுவார்]. *"அவர் [அடையாளமான] பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவார்"* அதன் பிறகு அடையாளமான பலிகள் நீக்கப்பட்டு நிறைவேறுதலான பலி முன்வைக்கப்படுகிறது.

## இஸ்ரவேலர்களுடைய மீறுதல்களினிமித்தம் அவர் மரித்தார்

### HE DIED FOR ISRAEL'S TRANSGRESSION

இப்பிரகாரமே, இக்காரியங்களைக் குறித்து மனம் வருந்துகிற இஸ்ரவேலர்கள் விளங்கிக் கொண்டதும் இது குறித்து அவர்கள் சாட்சி கூறுவார்கள். *"என் ஜனத்தின் (இஸ்ரவேலரின்) மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்."* (ஏசா. 53 : 8) இங்கேயும் மீண்டும் மேசியா மற்றவர்களுக்காகப் பாவ நிவாரணம் செய்ய பாடுகள் அனுபவித்து மரணத்திற்கு உட்படுத்தப்படுவார் என்பது வலியுறுத்திக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறாக மறுபடியும் மறுபடியும் கூறப்பட்டிருப்பதின் மூலம் அது ஒரு முக்கியமான பகுதி என காட்டுகிறது. அநேகமாக மனந்திரும்பிய இஸ்ரவேலரின் வரவிருக்கிற சாட்சி கூறும் வேலையில் இது மிகவும் முக்கியமான பகுதியாக இருக்கும்.

தனி நபராகிய தேவனுடைய தாசனாகிய அந்த நல்ல மேய்ப்பர், *"எனது ஜனமாகிய"* இஸ்ரவேலர்களுக்காக தமது ஜீவனைச் சமர்ப்பிப்பார் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே இதிலிருந்து தெளிவாக தெரிய வருவது என்னவென்றால் *"எனது ஜனம்"* என்று தேவனுடைய தாசனைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. மாறாக இந்த ஜனங்களின் *"மீறுதல்களுக்காக"* அந்த தனி நபராகிய மேசியா அறுப்புண்டு போனார். ஆகவே, இதன் விளைவாக, தேவ ஆட்டுகுட்டியாக பலியிடும் பொருட்டு அவர் *"என் ஜனத்தின் மீறுதலினி மித்தம்"* அவர் அடிக்கப்படும் படியான ஆட்டுக்குட்டியாக கொண்டு செல்லப்பட்டார். எழுதப்பட்டிருக்கிறபடி எல்லா இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்பட வேண்டும். (ஏசா. 59 : 20; எசே. 36 : 26-33): *"மீட்பர் சீயோ னுக்கும், யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்பு கிறவர்களுக்கும், வருவார். உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி உங்களை ரட்சித்து ...... அந்நாளிலே நான் உங்களுடைய எல்லா அக்கிரமங்களிலிருந்தும் உங்களை சுத்திகரித்து ......... உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத் திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக்கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்."*

ஆனால், "என் ஜனங்கள்" என்பது, அதன் விசாலமான கருத்தில் யாக்கோபிலே மீறுதல்களை விட்டுத் திரும்புகிறவர்கள் மாத்திரம் அல்லாமல் வேறு பலரும் அதில் அடங்குவார்கள் என்று குறிப்பிடுகிறது. எப்படியெனில் தேவனுடைய தாசன் *"புறஜாதியாருக்கும் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருவார். அவர்கள் ஜாதிகளுக்கு ஒளியாக இருப்பார்கள். புறஜாதியார் உன் வெளிச்சத்திற்கு வருவார்கள்."* அப்பொழுது தேவன் *"என் ஜனமல்*

*லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன். அவர்கள் என் தேவனே என்பார்கள்."* (ஏசா. 42 : 1, 6; 49 : 6; 60 : 3, 5, 11; சங். 86 : 9; ஓசியா. 2 : 23)

## தேவனுடைய தாசன் அடக்கம் செய்யப்படுதல்

### THE BURIAL OF GOD'S SERVANT

*"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள். ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."* (ஏசா. 53 : 9). இஸ்ரவேலில் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு பொதுவாக மரியாதைக்குரிய நல்லடக்கம் கொடுக்கப் படுவது கிடையாது. ஜோசபஸ் என்பவர் அக்காலங்களில் நடைமுறையில் இருந்த விதி முறைகளை தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். (Antiquities iv; viii 6). *"தேவதூஷணம் செய்பவர் கல் எறிந்து கொல்லப்பட வேண்டும், மேலும் தூக்கு மரத்தில் நாள் முழுவதும் தொங்க விடப்பட வேண்டும். அதன் பிற்பாடு அவர் அவமானமான, இழிவான முறையில் அடக்கம் பண்ணப்பட வேண்டும்."*



ஆனால் பெரும் குற்றவாளி என நீதி வழங்கப் பட்டவரும், தேவதூஷணம் பேசியவர் என பழி சுமத்தப்பட்டவரும், பெரும் குற்றவாளி என கொலை பாதகர்களுடன் மரித்த அவருக்கு அவர்களுடன்தான் ஒரு கல்லறை இருந்திருக்க வேண்டும், இப்படிப்பட்ட பாதகத்துக்கும் அதிகம் செய்தவராக தீர்மானிக்கப்பட்ட அவருக்கு எப்படிப்பட்ட கல்லறை கிடைத்தது தெரியுமா? இது உண்மையில் இயேசுவின்மேல் பொறாமையும் வெறுப்பும் கொண்ட யூத தலைவர்களுக்கு சந்தோஷமாக இருந்திருக்கும். அவருக்கு ஒரு கேவலமானதும் கொடூரமானது மான மரணத்தை கொடுக்க யூத தலைவர்கள் சதி செய்தனர். அவரை சிலுவையின் மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து அவருடைய கரங்களிலும் பாதங்களிலும் ஆணியடித்து அவரை அவமானப்படுத்தியதோடு, தங்களின் வாயில் வந்தபடி தூஷித்து, பரியாசம் பண்ணி, ஏளனம் செய்து தங்கள் உதட்டைப் பிதுக்கி, தங்களின் தலைகளைத் துலுக்கி, *"கர்த்தர்மேல் நம்பிக்கை யாயிருந்தானே; அவர் இவனை விடுவிக்கட்டும். இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டு விடட்டும் என்றார்கள்"*(சங். 22 : 7-20). ஆனால் தேவன் தம்முடைய குமாரனும், தாசனுமாயிருக்கிறவருக்கு மரியாதையான விதத்தில் நல்லடக்கம் செய்ய சித்தமுடையவராக இருந்தார்.

மேசியாவின் மரணத்தோடு அவருடைய பாவநிவாரண பலி முழுமைப் பெற்றது. ஆகவே துன்மார்க்கர்களுடன் ஒரு பிரேத குழிக்குள் மேசியாவின் உடலை அடக்கம் செய்ய எதிராளிகள் நினைத்ததை தேவன் இல்லாமல் ஆக்கினார். தமது தாசனுக்கு ஒரு ஐசுவரியவானின் கல்லறைக்குள் இடம் கிடைக்க ஒழுங்குகள் செய்தார். (அர்மத்தேயு ஊரானாகிய யோசேப்பின் கல்லறையில்). எசே. 28 : 8, 10-ல் இருப்பது போலவே இங்கு மரணம் என்கிற வார்த்தை எபிரேய மொழியில் பன்மையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் அது ஒரு தனி நபரின் மரணத்தையும் சுட்டிக் காட்டுகிறது - ஆனால் அந்த நபர் பல முறை மரிப்பதாக நாம் கருதக்கூடாது. ஆனால் மாறாக டெலிட்ஸ் என்பவர் விளக்குவது போல் கொடூரமான மரணத்தை அதாவது ஒருவன் மீண்டும் மீண்டும் மரிப்பது போன்ற கொடுமையான வலியை குறிப்பிடுவதற்கு அங்கு அந்த வார்த்தை பன்மையில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

ஆனால் இயேசுவின் சத்துருக்கள் சதித்திட்டம் செய்தபடியோ அல்லது தீர்மானித்தபடியோ அல்லாமல் அவருக்கு ஏன் நேர்த்தியானதும் மரியாதைக்குரியதுமான நல்லடக்கம் வழங்கப்பட்டது? ஏனென்றால் *"அவர் கொடுமை செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."* அவர் மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். இப்போது அவர் தம்மை தாழ்த்தவும் கொடுமையான பாடுகள் அனுபவிப்பதற்கும் உரிய காலம் முடிவடைந்துவிட்டது. இதற்கு மேலும் அவர் அவமானப்பட வேண்டியதில்லை. இதற்கும் மேலாகவும் அவமானப்பட அவருக்கு அனுமதிக்கப்படவும் இல்லை. அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராய் அவர் மரித்தார். அவருடைய குற்றமில்லாத தன்மையும் நீதியும் இங்கு மறுபடியும் வலியுறுத்தப்படுகிறது. அவரது மரணம் பிறருக்காக அவர் செலுத்திய பாவ நிவாரண பலியாகும்.

## தேவனுடைய நன்மையான சித்தம் (விருப்பம்)

### GOD'S GOOD PLEASURE

*"கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார் (சொல்லர்த்தமாக பிழிதல், வசனம் 5 - ஒத்துப்பார்க்க)"* - அல்லது சுகவீனத்தினால் அவரை வருத்தினார். இது பாவத்தின் ஓர் விளைவு ஆகும். ஏசா. 53 : 10.

இந்த வாக்கியம் முன்னால் சொல்லப்பட்ட 4, 5 வசனங்களை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. அதன்படி தேவனுடைய தாசன் வெறும் சூழ்நிலைகளின் காரணமாக மாத்திரமே துயரத்திற்கு உட்படுத்தப்பட்டார் என்பதல்ல, ஆனால் அது பரலோக பிதா, தம்முடைய மகா அன்பில் நமக்கு மீட்பை உண்டுபண்ணுவதற்காகத் தம்முடைய ஒரே பேறான குமாரனைப் பாடுகளுக்கு உட்படுத்தி நமக்காக மரிக்கும்படி செய்தார். இப்படிச் செய்வது பிதாவானவருக்குப் பிரியமாக இருந்தது (சங். 103 : 13) என்பதைக் காட்டுகிறது. குற்றவாளிகளுக்கு பதிலாக ஒரு நிரபராதி பாடுகளை அனுபவித்தார் என்று மாத்திரமல்ல, ஆனால் தெய்வீக அன்பே அதனை ஒழுங்கு படுத்தியிருந்தது!

தன்னுடைய குமாரன் பாடுகள் அனுபவித்து மரிப்பதைப் பார்ப்பதில் தேவன் எந்த விதத்திலும் ஆனந்தம்

கொண்டிருக்க முடியாது. எவ்வாறெனில் அவரே பின்வருமாறு சாட்சி பகர்கின்றார். (எசே. 18 : 32) *"சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை."* - ஆனால் இயேசுவை நொறுக்கியதும் அவரை ஆழ்ந்த துயரத்திற்குட்படுத்தி நம் எல்லோருடைய மீறுதல்களையும் அவர் மேல் விழப் பண்ணியதும் தேவனுக்குப் பிரியமாக இருந்தது. இவ்வாறு மேசியாவின் பாடுகளும் அவரது மரணமும் மாத்திரம் எதிர்பார்க்கப்பட்ட முடிவல்ல. ஆனால் ஒரு முடிவை வந்து எட்டுவதற்கு இவைகள் அவசியமாயிற்று. இவ்வாறு ஏற்கனவே அர்ப்பணிக்கப்பட்ட ஈடுபலி அதாவது சரி நிகரான கிரயப்பொருள் ஆதாமிற்கும் அவன் அறையில் பிறவாது இருந்த சந்ததியாருக்கும் ஆதாம் பாவம் செய்தபோது தேவைப்பட்ட கிரயப் பொருள் அவனுக்காக நீதியிடம் செலுத்தப்பட்டது. இதன் மூலமாக இந்த *"பூமியின் வம்சங்களெல்லாம்"* ஒவ்வொரு நபருக்கும், அவர் மூலமாக நித்திய ஜீவனைப் பெறுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுவதன் மூலம் ஆசீர்வதிக்கப்படுகிறது. ஆபிரகாமின் மகிமையான வித்தாக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு எல்லோரிலும் மேன்மையாக உயர்த்தப் பட்டிருக்கிறார். எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைப் பெற்ற இயேசுவின் நாமத்தில் முழங்கால் யாவும் முடங்கும். எல்லா நாவுகளும் அவரே கர்த்தர் என்று அறிக்கைப் பண்ணும். இப்பேற்பட்ட அவர் மூலமாய் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். (ஆதி. 22 : 18; 1 சாமு. 2 : 10; சங். 2 : 6-12; 45; ஏசா. 45 : 22-25).

## வருங்கால ஆசீர்வாதங்களுக்கான அடித்தளம்

### THE BASIS FOR FUTURE BLESSINGS

*"நீர் (பிதாவாகிய தேவன்) அவருடைய ஆத்துமாவை பாவநிவாரண பலியாக ஆக்கினபோது"* என்று ஆங்கில வேதாகமத்தில் உள்ளது. அதனை அதற்கு சமமான ஏற்ற விதத்தில் இவ்வாறாக மொழிபெயர்க்கலாம். *"அவருடைய ஆத்துமா ஒரு பாவ நிவாரண பலியை உண்டாக்கும்போது"* (ஏசா. 53 : 10 லீசர் மொழிபெயர்ப்பு). இதனை எந்த விதத்தில் வைத்துப் பார்த்தாலும் தேவனுடைய தாசன் *"பாவ நிவாரண பலியை"* கொடுப்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அவர் தம்மைத்தாமே நம் எல்லாருக்காகவும் ஒரு கிரயப் பொருளாக சமர்பித்தார். ஆதாம் பாவத்தினால் தன்னுடையதும் இன்னும் பிறவாதிருந்த மனுக்குலத்தினுடையதுமான ஜீவனை இழந்தான். ஆதாமுடைய ஆதி. 1 : 27; 2 : 7 பரிபூரண மனுஷீக ஆத்துமாவிற்குரிய சரிநிகரான இயேசுவினுடைய பரிபூரண மனுஷீக ஆத்துமாவே ஈடுபலியாகும் அல்லது பிரதிக் கிரையமாகும்.

ஆதாமும் அவனது சந்ததியும் பாவம் செய்ததி னிமித்தம், பாவநிவாரண பலியாக, தேவஆட்டு குட்டியானவரே கிருபாதார பலியாக இருக்கிறார். இதனை குற்ற நிவாரண பலி அல்லது மீறுதல்களுக்காக செலுத்தும் பலி எனவும் கூறலாம். எபிரேய வார்த்தையாகிய ஆஸாம் என்ற வார்த்தையின் சரியான மொழிபெயர்ப்பு இங்கே உபயோகிக்கப்பட்டுள்ளது . (Leeser & ARV) பார்க்கவும். ஏதேன் தோட்டத்தில் நம் ஆதித்தகப்பனாகிய ஆதாமால் தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமான மீறுதல் ஏற்பட்டது. அதனால் மனுக்குலம் பாவத்தில் விழுந்தது. அந்த பாவத்தில் விழுந்த மனுக்குலத்தினிமித்தம் இயேசு பாவநிவாரண பலி செலுத்தி அவர்களை ஒப்புரவாக்கி நீதியை முழுமையாகத் திருப்திப்படுத்தினார். இங்கு பாவநிவாரண பலி (எபிரேய மொழியில் சட்டாத் chattath) சற்று அதிகமாக சுட்டிக் காட்டுவது பாவத்தில் விழுந்த நிலையைத் தான். இப்படி பாவம் செய்தவருக்கு, தேவனுடன் மீண்டும் ஒப்புரவாவதற்கு ஒரு பாவ நிவாரணபலி தேவைப்பட்டது. குற்ற நிவாரண பலியானது சரியான மீறுதலையும் அதின் குற்றத்தையும் கடன் பட்டதையும் நீதியின் தேவையை திருப்தி செய்ய வேண்டி கொடுத்த கிரயத்தையும் மிகவும் தெளிவாக குறிப்பிடுகிறது.

## மேசியாவின் வித்து

### MESSIAH'S SEED

மேசியா நமது கடன்களைத் தீர்த்தார். அத்துடன் நமக்குப் பதிலாகத் தம்மையே பாவ நிவாரணப் பலியாகக் கொடுத்தார். பின் வருபவை அதனால் விளைந்த சில மகிமையான பலன்களாகும். அவர் [நம்முடைய மீறுதல் களினிமித்தம் காயப்படுத்தப்பட்டு (குத்தப்பட்டு), நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். (நசுக்கப் பட்டாக)] தமது சந்ததியைக் (ரோதர்காம் மொழிபெயர்ப்பின்படி ஒரு சந்ததியை) காண்பார். அவர் பரிபூரண மானிட ஜீவியாக இருந்தபோதும் *"ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்."* அதனால் ஒரு தகப்பன் என்று சொல்லும் அளவிற்கு அவருக்கென்று ஒரு சந்ததி கிடையாது. இருந்தபோதும் அவர் தம் ஜீவனை சரிநிகரான கிரயப் பொருளாக சமர்ப்பித்தபடியால் அவரால் ஆதாமையும் அவனுடைய சந்ததியையும் கிரயமாக பெற்றுக் கொள்ள முடிந்தது. அவர் தேவனுடைய வலது கரமாக உயர்த்தப்பட்ட நிலையில் (சங். 110 : 1) மனுக்குலத்தை அவருக்கு சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை அவருக்குச் சொந்தமாகவும் தேவன் கொடுப்பார். (சங். 2 : 8). அத்துடன் உயிர்தெழுதலின்போது பூமியின் தூளில் நித்திரை செய்பவர்கள் எழும்பி வருவார்கள். (தானி. 12 : 2). அவர் அவர்களுக்கு புத்துயிர் ஊட்டுவார். (உபா. 18 : 15-19) அவர்கள் நித்திய ஜீவனுக்குள் வருவார்கள். இப்படியாக அவர் அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறவராக அவர்களுடைய நித்திய பிதாவாக ஆவார் (ஏசா. 9 : 6).

இவ்வாறு *"அவர் ஒரு சந்ததியைக் காண்பார்"* - அது அவருடைய சந்ததி. அவர் மூலமாகவும் அவரால் மாத்திரமே, ஆதாமும் அவனோடு வீழ்ந்து போன மனுக்குலமும் மரண ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுபட்டு சதா காலத்திற்கும் நித்திய ஜீவனை பெறுவார்கள். ஆதாமிற்கும் அவனது சந்ததிக்கும் ஓர் கிரயப் பொருளாக இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்ததின் விளைவாக எத்தகைய மகத்துவம் அவருக்குக் கிடைத்திருக்கிறது! உண்மையிலேயே *"ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும். தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்."* (சங். 22 : 30).

ஏற்கனவே அநேகர் மேசியாவின் பக்கத்திற்கு திரும்பி விட்டனர். (அவர்கள் *"வானத்து நட்சத்திரங்களாக"* ஆபிரகாமின் வித்தாக இருக்கிறார்கள்.) இவர்கள் தங்களின் இரட்சிப்பிற்காக அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலக மக்களுக்கோ இழந்து போனதைத் திரும்ப பெறும் ஆசீர் வாதங்கள் உடனடியாக வரப்போவதில்லை. ஆதாம் பரிபூரண மானிட ஜீவியாக, பாவம் செய்வதற்கு முன்னர் எப்படி இருந்தானோ அந்த நிலைக்கு உலக மக்கள் வர

வேண்டுமென்றால் இஸ்ரவேலர்கள் முதலில் இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். *"(கடற்கரை மணல்போல் உள்ள"* ஆபிரகாமின் வித்து). சகரி. 12 : 9, 10; எசே. 39 : 27-29) நீண்ட ஆயுசுள்ளவராகிய தேவன் மனுஷ குமாரனுக்கு முழுக் கருத்தில் *"சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்கு கர்த்தத் துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுப்பார். அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாதது மாயிருக்கும்."* (தானி. 7 : 13, 14) *"அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்."* (சங். 89 : 4, 29, 36, 37).

## மேசியாவின் நித்திய ஜீவன்

### MESSIAH'S EVERLASTING LIFE

*"அவர் நீடித்த நாளாயிருப்பார்"* (ஏசா. 53 : 10). இதுவும் ஒரு விதத்தில் பார்க்கப்போனால் முரண்பாடானது போல் காணப்படும். எப்படியெனில் ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டு போனவர், தம் ஆத்துமாவை மரணத்திற்கு ஒப்பு கொடுத்தவர், அடக்கம் செய்யப்பட்டவர், எப்படி வருங்காலத்தில் ஜீவனை அடைய முடியும் அதுவும் அவரது நாட்கள் எவ்வாறு நீடித்து இருக்கக் கூடும்? இதற்கு ஒரே தெளிவான விடை என்னவென்றால் அவருக்கு மரித்தோரிலிருந்து ஒரு உயிர்தெழுதல் கொடுக்கப்படும் என்பதே.

அவருடைய உயிர்தெழுதலைக் குறித்து அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கிறன்றன. (siloh) ஷிலோ - சமாதானத்தை உண்டாக்குகிறவர் என்கிற பெயரின் கீழ் *"ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்"* என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (ஆதி. 49 : 10 உடன் எசே. 21 : 27-ஐ ஒப்பிடுக). தாவீது (பிரியமானவன்) என்கிற பெயரின் கீழ் அவர் *"என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார்"* என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (எசே. 37 : 25) அதுமட்டுமல்ல அவர் *"மெல்கிசேதேக்கின் முறைமை யின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருப்பார்."* (சங். 110 : 4; சகரி. 6 : 12, 13) *"யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்"* அவரே. *"இஸ்ரவேலிலிருந்து எழும்பும் செங்கோலும் அவரே." "அவர் ஆளுகை செய்வார்." (எண். 24 : 17, 19) "தேவன் எழுப்பிய மிகப் பெரிய தீர்க்கதரிசி அவரே".* (உபா. 18 : 15-19). அவருடைய நீதியான அரசாட்சி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். (ஏசா. 9 : 6, 7; எரே. 23 : 5; தானி. 2 : 44; சங். 72).

மேசியாவின் உயிர்தெழுதலைக் குறித்து தீர்க்கதரிசியாகிய தாவீது பின் வருமாறு எழுதி யுள்ளார்.*"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் (sheol - ஷியோல் - மறந்துபோன நிலை) விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்."* (சங். 16 : 10, 11; 17 : 15). [இந்த வசனத்தை தாவீதுக்கு அவனது தனிப்பட்ட முறையின்படி வைத்து அர்த்தப்படுத்தக் கூடாது. ஏனெனில் தாவீது மரணம் என்கிற நித்திரைக்குள் பிரவேசித்து அடக்கம் செய்யப்பட்டு அழிவைக் கண்டான். தேவனுடைய தாசனாகிய மகா பெரிய தாவீதை அவர் சிலுவையில் அறையப்பட்ட மூன்றாம் நாளில் தேவன் மரணத்திலிருந்து ஓர் ஆவி ஜீவியாக உயிரோடெழுப்பினார். (சங். 22 : 16, 20-22). நிசான் 16 ஆம் தேதி தேவனுக்கு முன்பாக கொண்டு வரப்படும் முதல் முதிர்ந்த கதிர்க்கட்டின் மூலம் மரித்தவர்களிலிருந்து எழுந்த முதற்பலனான இயேசு அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். நீசான் 16 ஆம் தேதி என்பது நிசான் 14-ம் நாளில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதிலிருந்து மூன்றாம் நாள் ஆகும். (லேவி. 23 : 5, 6, 11, 15, 16) முதற்பலனான மேசியா அழிவைக் காணவில்லை. அவரது ஆவியின் சரீரத்திற்கு மாம்சமும் எலும்பும் கிடையாது. அது அழிவைக் காணாது.] *"ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு."* (சங். 16 : 10, 11) *"நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்."* (சங். 17 : 15).

இது சம்பந்தமாக ஒரு சுவையான சம்பவத்தை நாம் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கை பலி செலுத்தினான். அவனில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வித்து, மையம் கொண்டி ருந்தது. (ஆதி. 21 : 12). இது தேவன் தம்முடைய மிகுந்த அன்பின் நிமித்தம் தம்முடைய ஒரே பேறான குமாரனை பலியாக கொடுத்ததை அடையாளப்படுத்துகிறது. பலி பீடத்தில் கொல்லப்படுவதற்காக ஒரு ஆட்டுக்கடா தேவனால் கொடுக்கப்பட்டது. ஈசாக்கு அதிலிருந்து எழும்பி வந்தான். இந்த பூமியின் வம்சங்கள் யாவும் அவன் மூலமாய் ஆசீர்வதிக்கப்படும் பொருட்டு ஈசாக்கு அதிலிருந்து எழுப்பப்பட்டான். (ஆதி. 22 : 1-18) மாபெரும் நிறைவேறு தலாகிய பஸ்கா ஆட்டுக்குட்டியை தேவன் கொடுத்தார். அவருடைய சொந்த குமாரன் இதற்காக மாம்சமாக்கப் பட்டார். பரிபூரண மானிட ஜீவியாக, ஒரு கன்னியிடமிருந்து பிறந்தார். (ஏசா. 7 : 14). அவர் ஆதாமிற்காக ஈடுபலியாக, பிரதிக்கிரயமாக தம்மை வழங்கினார். தேவ ஆட்டுக் குட்டியாகிய அவர் இவ்வுலகின் பாவங்களுக்காக தமது மனுஷீக ஜீவனைக் கொடுத்தார். இந்த ஆட்டுக்குட்டி நமக்காக அடிக்கப்பட்டார்.

தேவனுடைய தாசன், புஸ்தகச் சுருளில் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே அவர் மானிட ஜீவியாக தமது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வந்தபொழுது. (சங். 40 : 7, 8) தேவன் அவரை தெய்வீக சுபாவத்திற்குரிய ஒரு புது சிருஷ்டியாக ஜெனிப்பித்தார். (சங். 2 : 7; 89 : 26, 27) அவரை தமது மேசியாவாக பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் செய்தார். (சங். 45 : 7; ஏசா. 61 : 1-3) அவர் ஆபிரகாம் எவ்வாறு பலிபீடத்தில் ஒரு ஆட்டுக்கடாவை பலியிட்டாரோ அதில் சித்தரித்துக் காட்டியிருக்கிறபடி தேவனுடைய தாசன் நம்முடைய ஈடுபலியாக மாம்சத்தில் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார். ஆனால் அவர் ஓர் உயிர்ப்பிக்கிற ஆவி ஜீவியாக எழுப்பப்பட்டார் - மேசியா - மாபெரும் வாக்குத்தத்தத்தின்படி உள்ள ஆபிரகாமின் வித்து. அவர் மூலமாக இந்த பூமியில்

உள்ள வம்சங்கள் யாவும் ஆசீர்வதிக்கப்படும்.

மேல் கூறியவற்றிலிருந்து தெரியவருவது என்னவென்றால் நமக்கு ஜீவனுள்ள ஒரு இரட்சகர் உண்டு. ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட சென்றபோது ஒரு ஆட்டுக்கடா அவனுக்காக பலியிடப்பட்டு ஈசாக்கு பலிபீடத்திலிருந்து உயிரோடு எழும்பி வந்தது போல் நமக்கு உயிர்த்தெழுந்த இரட்சகர் ஒருவர் உண்டு. மேசியாவின் மனுஷீகம் இந்த உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டது. எனக்கு *"அருமையானது"*என்பது அவருடைய புது சிருஷ்டியே ஆகும் (சங். 22 : 20). பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்டு உபத்திரவங்களின்மூலம் பூரணப்படுத்தப்பட்டு மரணத்திலிருந்து பிறந்தது. புது சிருஷ்டி உயிர்பிக்கப்பட்டது. – அவருடைய புது சிருஷ்டி நீடித்த வாழ்விற்காக மரண நித்திரையிலிருந்து முதற்பலனாக உயிரோடெழுப்பப்பட்டது. (லேவி. 23 : 10, 11).

உண்மையிலேயே அவர் நீடித்த நாளாயிருப்பார் – நித்திய காலமாக! *"அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார். நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர். உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது. மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளுனீர். அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர். அவரை உம்முடைய சமூகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்."* (சங். 21 : 4-6). இது உண்மையில், மனந்திரும்பி விசுவாசிக்கிற இஸ்ரவேலர்கள் மூலம் பிரசங்கிக்கப்பட வேண்டிய நற்செய்தியின் ஒரு குறிப்பிடத்தக்க முக்கிய பாகமாகும்.

* * *

# எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய வீடு

THE LORD'S HOUSE OVER ALL

*"நீங்கள் வலது புறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும், வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்."* ஏசா. 30 : 21.

இப்போதைய நம்முடைய நாளில் *"ஒலிகளைக் கேட்கக் கூடிய சக்தி"* என்றழைக்கப்படுகிற முறையின் மூலம், பொல்லாத ஆவிகள் மனுக்குலத்தோடு மன ரீதியான நெருக்கமான தொடர்பைப் பெறுவதற்காக கடும் முயற்சி செய்வதாகக் காணப்படுகிறது. இத்தகைய சக்தி பெற்ற நபர் மற்றொருவருக்கும் கேட்காத ஒலியைக் கேட்கச் கூடிய திறனைப் பெற்றிருப்பதால் அவன் தேவனுடைய மகா தயவைப் பெற்றிருப்பதாக அறிவுறுத்தப்படுகிறது. ஆகையால் அவன் தேவன் மற்றும் தேவதூதர்களின் விசேஷித்த கிருபை தனக்கிருப்பதாக நினைத்துக் கொண்டு வழக்கம்போல் தன்னை உயர்த்துவான். அதன் பிறகு இந்த விழுந்து போன கீழ்ப்படியாமையுள்ள தேவ தூதர்கள் அவனது தவறான வழியை விரைவாக சாதகமாக்கிக் கொண்டு அவனுடைய மனதை ஆக்கிரமிக்க நாடுவார்கள். (யூதா 7, 8). நாங்கள் இத்தகைய நிலையிலிருந்து ஜனங்களைக் காக்க முயற்சிக்கிறோம். அடிக்கடி அப்படி உதவி பெற்றவர்களைக் குறித்து கேள்விப் படுகிறோம். சில நாட்களுக்கு முன்பு இது போன்ற ஒரு பெண்ணின் விஷயத்தை குறித்து நாங்கள் அறிந்து கொண்டோம். அவள் தன் மனதில் தோன்றும் எண்ணங்களின் மூலம் தெய்வீக ஆதிக்கமானது மனரீதியான கீழ்ப்படிதலுக்குள் அவளைக் கொண்டு வரும்படி நாடுகிறது என எண்ணினாள். பிறகு, அது நிச்சயமாக தேவனுடைய சத்தமல்ல என்றும் அது தீமையின் ஆதிக்கம் என்பதையும் அவள் கண்டு கொண்டாள்.

மறுப்பக்கத்தில் இந்த கட்டுரையின் தலைப்பில் கூறப்பட்டுள்ள சத்தமானது தேவனுடைய சத்தத்தைக் குறிக்கும் என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். நூற்றாண்டுகளைக் குறித்த வரலாறு நமக்குப் பின்னால் இருக்கிறது என்ற கருத்தில் இந்த சத்தமானது நமக்குப் பின்னால் இருக்கிறது. இதற்கு இணக்கமாக ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளிடம் இருந்து வரும் சத்தத்தை நாம் உற்றுக் கேட்க வேண்டும். அதனைக் கவனிக்கும் போது நாம் செல்ல வேண்டிய வழியைக் குறிப்பிடக்கூடிய தேவனுடைய சத்தம் இதுவே என்று நாம் அங்கீகரித்துக் கொள்வோம். எவ்வாறாக இருப்பினும் நாம் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் கவனிக்கும்போது நாம் கள்ளத்தீர்க்கதரிசிகளின் சத்தத்தையும் கூட கேட்டிருக்கிறோம். உதாரணமாக நாம் மகா எதிராளியாகிய சாத்தான் மற்றும் அவனுடைய தூதர்களின் சத்தத்தையும் நாம் கேட்டிருக்கிறோம். தேவனுடைய குரல் *"நீ சாகவே சாவாய்"* என்று கூறிற்று. சர்ப்பத்தின் மூலம் சத்துருவானவனின் குரலோ *"நீங்கள் சாகவே சாவதில்லை"* என்று கூறிற்று. ஒரு காலத்தில் நம்மில் அநேகர் சாத்தானின் குரலின் மூலமாக தவறாக வழிநடத்தப்பட்டு சாத்தானுடைய பொய்களாகிய நித்திய வேதனை, மரித்தோர் சுய நினைவுடன் இருக்கிறார்கள் போன்ற பல விதமான தப்பறைகளை நம்பி நாம் வஞ்சிக்கப்பட்டோம். ஆனால் இப்பொழுதோ நாம் ஆசீர்வதிக்கப்பட்டு, சரியான தகவல்களைப் பெற்று தேவன்

காட்டின வழியில் நடக்கிறோம். முற்காலத்தைச் சேர்ந்த "ஆலய பாதிரியார்கள்" என அழைக்கப்பட்டவர்கள், இயேசு, அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் ஆகியோர் கொடுத்த அதே சத்தத்தைக் கொடுக்கவில்லை என்று நாங்கள் கண்டு கொண்டோம். இத்தகைய எல்லா சத்தங்களிலிருந்தும் நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய மேய்ப்பனின் சத்தத்தைக் கவனிக்க வேண்டும். வேதாகமத்தில் நமக்காக உண்டாக்கப்பட்டிருக்கிற நீதியின் ஒழுங்கு முறைகளை நாம் பார்க்க வேண்டும். தேவனுடைய வார்த்தையில் இல்லாத எந்த ஒன்றையும் குறித்து நாம் ஆராயக் கூடாது. ஆகையால் அது தேவனுடைய சத்தமல்ல. மாறாக அது நம்மை ஏமாற்றி மேய்ப்பனிடமிருந்து ஆட்டை பறிப்பதற்கு காரணமாக இருக்கிறது.

துன்பங்களும் சோதனைகளும் நிறைந்த இந்த ஜீவியத்தின் மத்தியில் துக்கமடைந்த இருதயம் ஞானமான வழி காட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் எவ்வளவு அவசியமானது என்பதை உணரும்! எவ்வாறாக இருப்பினும் நமக்குத் தேவையான ஆலோசனைகள் எப்பொழுதும் ஞானமானவைகளாக இருப்பதில்லை. சில சமயங்களில் அது தெய்வபயமற்ற பாவிகளின் ஆலோசனைகளாக இருக்கலாம். சில சமயங்களில் அது முதிர்ச்சியடையாத அனுபவமற்ற ஆலோசனைகளாக இருக்கலாம். இத்தகைய ஆலோசனைகள் அதிருப்தியையும் அடிக்கடி அழிவையும் ஏற்படுத்துகிறது. அதன் பலனாக உபத்திரவம் மற்றும் இருள் உள்ள ஒரு பாதையில் நடத்தப்படுவோம். இதுவே உலகத்தின் வழியாகும். தன் சொந்த நடைகளை தானே ஒழுங்குபடுத்திக் கொள்ள மனிதனால் முடியாது. (எரே. 10 : 23). மாறாக நம் பாடத்தின் தலைப்பு வாக்கியத்தின் கருத்தைக் கவனிக்கிற தேவனுடைய பிள்ளையின் வழி அப்படிப்பட்டதல்ல. ஆலோசனையை எங்கே தேட வேண்டும் என்பதை அவன் கற்றுவிட்டான். ஞானத்தின் ஆலோசனையானது, அவனுடைய உதவிக்காக வர எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது.

தீர்க்கதரிசி இந்த வசனத்தில் *"உங்களுக்குப் பின்னாலே"* கேட்கும் சத்தம் என்று ஒரு வார்த்தையாக அதனை விவரிக்கிறார். அது பரிணாமவாதம், ஆவி மார்க்கம், கிறிஸ்தவ விஞ்ஞானம், புதிய யுகம் அல்லது மற்ற மனுஷீக தத்துவ சாஸ்திரங்கள் போன்ற புதிய வேதாந்தங்கள் குறிப்பிடுகிற *"உங்களுக்கு முன்னால்"* கேட்கிற சத்தமல்ல. ஆனால் அது நமது மீட்பரும் ஆண்டவரும் நமது போதகரும், நமது முன்மாதிரியும் நமது தலைவருமாகிய கிறிஸ்துவின் மூலம் வந்த நம்பிக்கையின் ஆசீர்வதிக்கப்பட்ட போதனைகளோடுள்ள பழைய சத்தியமாகும். அது கிட்டத்தட்ட 2000 முதல் 4000 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே அவருடைய ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலம் கொடுக்கப்பட்ட கர்த்தருடைய சத்தமாகும். தீர்க்கதரிசி, ஞானமான ஆலோசனைகளை விரும்பும் யாவருடைய கவனத்தையும் இந்த தெய்வீக தூண்டுதலினால் உண்டான வார்த்தையிடம் திருப்புகிறார். அந்த வார்த்தையில் *"வழி இதுவே இதிலே நடவுங்கள்"* என்ற தேவனுடைய சத்தத்தை நாம் கேட்கிறோம். நாம் சில பிரிவுகளிலுள்ள பாதையில் வந்து நிற்கும் போது, அதாவது நமது அனுபவத்தில் வலது புறமா இடது புறமா எங்கே திரும்புவது என்று அறிய முடியாத சில சந்தேகமான சூழ்நிலையில் வந்து நிற்கும் போது நாம் நின்று கர்த்தருடைய சத்தத்தைக் கவனிக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்ப வேண்டும். குழப்பமான காரியத்தைக் குறித்து அது சம்பந்தமான தேவனுடைய வார்த்தையின் கட்டளைகளையும், அதின் கோட்பாடுகளையும் அதின் விளக்கங்களையும் சிந்திக்க வேண்டும். இவைகளைச் சிந்திப்பதின் மூலம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள நாட வேண்டும். அவருடைய ஆவியின் வழிநடத்துதலையும் நாம் கேட்க வேண்டும். நம்முடைய மனதை அன்பான, பணிவான விசுவாசமுள்ள மனபான்மைக்குள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். பணிவோடு விசாரிக்கிற ஒவ்வொரு இருதயத்திற்கும் *"வழி இதுவே இதிலே நடவுங்கள்"* என்ற தெளிவான பதில் கொடுக்கப்படும்.

தீர்க்கதரிசியினுடைய இந்த வார்த்தைகள் மாம்ச இஸ்ரவேலருக்கு நேரடியாக கொடுக்கப்பட்டாலும் ஆவிக்குரிய இஸ்ரவேலரிடம் அதினுடைய பிரயோகம் வல்லமையில் குறைந்ததல்ல. சுபாவ இஸ்ரவேலருக்கு பிரயோகித்தது போல, கிறிஸ்தவ சபையின் எண்ணிக்கை கூட்டிச் சேர்க்கப்படுவதைத் தொடர்ந்து சுபாவ இஸ்ரவேலருக்கு தேவ தயவு திரும்பும் என்பதைத் தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறார். யூதர்களின் நீண்ட கால தண்டனையும் அவர்களுடைய குருட்டாட்டமும் முடிவுக்கு வரும் (ரோம. 11 : 25, 26). அதன் பிறகு, கிறிஸ்துவின் மத்தியஸ்த ராஜ்யத்தின் கீழ் குருடரின் கண்கள் திறக்கப்பட்டு செவிடரின் செவிகள் திறவுண்டு போம். முழுமையான ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையின் சத்தமானது அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக தெளிவாக்கப்படும். அவை அவர்களை கர்த்தருடைய சரியான வழிகளில் வழிநடத்தும். *"புஸ்தகங்கள்"* (நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசன ஆகமங்கள் மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய புஸ்தகங்கள்) *"திறக்கப்பட்டன"*. இந்த இரண்டு புஸ்தகங்களிலும் குறிப்பிட்டுள்ளபடி

நியாயத்தீர்ப்படைந்தார்கள். (வெளி. 20 : 12). மாம்ச இஸ்ரவேலருக்கும், உலகத்தார் அனைவருக்கும் அதன்பிறகு சுட்டிக்காட்டப்பட இருக்கும் பாதை, மகா சிறந்த *"பரிசுத்த பெரும் பாதையாகும்." "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்"* அதுமுதல் தங்களுடைய அர்ப்பணிப்பின் மூலம் வாய்ப்பைப் பெறுவார்கள். *"ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்."* (ஏசா. 35 : 8, 10). அந்த பாதையானது நித்திய ஜீவன், சமாதானம், பாவம் மற்றும் மரணத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை மற்றும் மனுஷீக பூரணத்திற்கு முழுவதுமாக திரும்பக் கொண்டு வருதல் ஆகிய இவைகளில் வந்து முடிவடையும். இஸ்ரவேலருக்கும் உலகத்தாரனைவருக்கும் வரவிருக்கிற யுகத்தில் அந்த ஜீவ பாதை மிகவும் தெளிவாக்கப்படும். கண்களால் காணாமல் ஆனால் விசுவாசத்தின் மூலம் கண்டு நடக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு இப்பொழுது தெளிவாக்கப்பட்டிருப்பதுபோல் அவர்களுக்கும் தெளிவாக்கப்படும். இது இவ்வாறாக காட்டப்படுகிறது. (1) விசுவாச பாதை; யாரெல்லாம் இப்பொழுது விசுவாசத்தின் மூலம் நடக்கிறார்களோ அவர்களெல்லாரும் தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்கள். விசுவாசமுள்ள ஆபிரகாமோடு கூட ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ரோம. 4 : 16; கலா. 3 : 6-9; E-17, p-18). உடன்படிக்கையும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவர்களை தங்களுடைய மாபெரும் நிறைவேறுதலால் இணைக்கும். (2) இது மரண பரியந்தமும் தேவனிடம் முழுமையான பிரதிஷ்டையோடு இருக்கும் வழியாகும். அதாவது ஒருவன் தன்னுடைய சித்தத்தைத் தேவனுடைய சித்தத்திற்குள் புதைத்து விடுவதைக் குறிக்கிறது. அதாவது தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்தலைக் குறிக்கிறது. (ரோம. 12 : 1). ஆகையால், விசுவாசம் மற்றும் பிரதிஷ்டை ஆகிய இந்த இரண்டு அடிப்படைக் கொள்கைகளுக்கு இசைவாக நாம் புதிதான ஜீவனில் நடக்க அறிவுறுத்தப்படுகிறோம். நாம் மாம்சம் மற்றும் உலகம் ஆகியவற்றின் வழிகளைப் பின்பற்றக் கூடாது. ஆனால் ஆவிக்குரிய வழியைப் பின்பற்ற வேண்டும். மற்ற யூதர்களும், புறஜாதிகளும் தங்கள் வீணான சிந்தனைகளில் நடந்த விதமாய் நடக்காமல் நாம் ஜாக்கிரதையாய் நடக்க வேண்டும். *"நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களை போல கவனமாய் நடந்து கொள்ள பார்த்து, காலத்தை மீட்டுக் கொள்ளுங்கள்."* நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். (ரோம.6 : 4; 8 : 1; எபே. 4 : 17, 18; 5 : 16, 17; 2 கொரி.5 : 6).

விசுவாசம் மற்றும் பிரதிஷ்டையின் மூலம் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளாக ஒரு புதிதான ஜீவியத்திற்குள் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார் நுழைகிறார்கள். கிறிஸ்துவின் சிந்தையை அடைவதற்கும் பழைய விழுந்து போன அபூரணமான சுபாவத்தின் பலமான தூண்டுதல்களைக் கீழ்ப்படுத்துவதற்கும் இவ்வாறாக நடப்பது அவசியமாகிறது. மாம்சத்தின்படி நடவாமல் தேவனுக்கேற்கும் காரியங்களின்படி நடப்பதே புதிதான ஜீவனில் நடப்பது என்பதாகும். *"மாம்சத்தின்படி நடப்பது"* என்பது அதின் நம்பிக்கைகளையும், அதின் குறிக்கோள்களையும், அதின் ஆசைகளையும் பின் தொடர்வது என்பதாகும். மாம்சமும் ஆவியும் எப்பொழுதும் ஒன்றோடு ஒன்று போரிடுகிறது. மாம்சம் மற்றும் ஆவி ஆகிய இவை இரண்டின்படியும் வாழ்வது முடியாத காரியமாகும். ஆகையால், *"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள், ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்"* என்று எழுதப்பட்டிருக்கிறது. (ரோம. 8 13).

நாம் நடக்க வேண்டிய வழியைக் குறித்து பொதுவான போதனைகளின் மூலம் தேவனுடைய வார்த்தையானது பேசுகிறது. நாம் நம்முடைய வாழ்க்கையின் எல்லா சிறிய காரியங்களைக் குறித்தும் இந்த தெய்வீக வார்த்தைகளிடம் விசாரிப்பதற்கு வரும்படியாகவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். வலது புறமோ அல்லது இடது புறமோ நாம் எந்தப் பக்கம் திரும்புவது என்று அறியாவிடில் நமக்கு இந்த வாக்குத்தத்தம் உதவி செய்யும். அந்த வாக்குத்தத்தமானது, *"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி;" "உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக் கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளையெல்லாம் செவ்வைப்படுத்துவார்."* நாம் பாரமாக உணர்ந்தால் கூடுதலாக நம்மிடம் ஒரு வாக்குத்தத்தம் இருக்கிறது. *"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."* ஆகையால், நாம் அதினுடைய போதனைகள் மற்றும் கட்டளைகள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்து நடந்தால், *"பின்னாலே"* கேட்கும் சத்தமானது உங்கள் வாழ்க்கையின் பராமரிப்புகள் மற்றும் பரிட்சைகள் எல்லாவற்றின் மத்தியிலும் தேறுதலையும், சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் கொண்டுவரும். *"இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக."* (சங். 37 : 5; நீதி. 3 : 6; மத். 11 : 28; கலா. 6 : 16) .

* * *






## பேழை உருவாகிக் கொண்டிருந்த போது ஆதியாகமம் 6 WHILE THE ARK WAS PREPARING

தேவ தூதர்களைப் பரீட்சிக்க வேண்டியதினிமித்தம், தேவனுடைய வல்லமையின் வெளியே தெரியும் விதமான வெளிப்படுத்துதல்கள் எதுவும் இல்லை. தூதர்களின் துரோக மார்க்கமானது, நூற்றாண்டுகளாக பிரத்தியட்சமாக தொடர்ந்தது. இவ்வாறாக பரிசுத்தமான தேவதூதர்கள் பரீட்சிக்கப்பட்டார்கள். விழுந்து போனவர்கள் *"நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாதவர்கள்" - 1 பேது. 3 : 20.*

நோவாவின் குடும்பம் இதற்கு விதிவிலக்காக தனித்து நின்றது என்பதை *"நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாய் இருந்தான்"* என்ற வாக்கியத்தினால் உணரலாம். இந்த வாக்கியம் மற்றவர்கள் ஆதாமின் அசலான வித்தினால் உண்டானவர்களல்ல என்று குறிப்பிடுகிறது. (ஆதி. 6 : 9). ஆகையால் கலப்படம் பண்ணப்படாத ஆதாமின் வித்தினால் உண்டான நோவாவின் குடும்பத்தார் 8 பேர் மாத்திரமே. அவர்கள் தெய்வீக கட்டளையால் பேழையைக் கட்டினார்கள். அதன் மூலம் ஜலப்பிரளயம் சம்பந்தமான தெய்வீக சித்தத்தை உலகத்திற்குச் சாட்சியம் கொடுத்தினார்கள்.

ஜலப்பிரளயத்தின் மூலம் வரவிருக்கிற தேவனுடைய நியாயத்தீர்ப்பு சம்பந்தமான நோவாவின் போதனையானது கேலியாய் காணப்பட்டது. ஏனென்றால் ஜலப்பிரளயம் வரும்வரை பூமியில் மழை என்ற ஒன்று பெய்ததேயில்லை. பூமியின் மீது விழுந்த மாபெரும் *"வளையங்களில்"* ஜலப்பிரளயத்தின்போது விழுந்த வளையமானது சுத்தமான ஜலத்தினாலானது ஆகும். பல நூற்றாண்டுகளாக இருந்த வளையம் வானவெளியில் பரவி இருந்தது. பூமி முழுவதும் ஒரு பெரிய வெதுவெதுப்பான தாவர வீடாக இருந்தது. அநேகமாக பூமியில் பருவ நிலை மாறுதலோ புயல் காற்றோ இல்லை. ஏனென்றால் ஓயாத உஷ்ண காலத்தில் வானத்தின் தண்ணீர் வளையங்கள் இதை தடுத்து பாதுகாத்தது. அந்த காலக்கட்டத்தில் தேவன் இன்னும் *"பூமியின் மேல் மழையைப் பெய்யப் பண்ணவில்லை"* (ஆதி. 2 : 5) என்று வாசிக்கிறோம். நீதியை பிரசங்கிப்பவரான நோவா பரிகாசம் செய்யப்பட்டார், பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த தேவனுடைய பிள்ளைகள் விசுவாசமற்றவர்களால் பரிகாசம் செய்யப்பட்டது போலவும், தற்போது பரிகாசம் பண்ணப்பட்டுக் கொண்டிருப்பது போலவும், நோவா தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தினால் மூடனாக



வளையம் உடைந்ததினால் இரு துருவங்களிலும் இலட்சக்கணக்கான டன் எடை கொண்ட தண்ணீரை படியச் செய்து, இரு மாபெரும் ஆழிப் பேரலைகள் உருவாகி பூமியை மிகவும் ஆழமாக மூடி, சமுத்திரப்படுகைகளை ஆழமாக்கி, மேலும் சில மலைகளையும் உருவாக்கினது.

உலகத்தின் தொட்டிலாக இருந்து வந்த தண்ணீர் கடைசியில் வடிந்து சேர்ந்தது ஒரு வேளை ஆர்மீனியா நாடாக இருந்திருக்கலாம். ஒரு காலத்தில் அந்த நிலத்தின் அருகாமைப் பகுதி, தண்ணீரெல்லாம் வடிந்து ஒரு குளமாக இருந்ததென்று புவியியல் ஆராய்ச்சி நமக்கு கூறுகிறது. அது அதிகமான வண்டல் மண்ணை படிய வைத்திருப்பதினால் உண்மையென உறுதிப்படுத்துகிறது. அதன் அருகாமையில் தான் பேழை மிதந்தது. மேலும் தெய்வீக பாதுகாப்பினால் அரராத் மலையில் போய் தங்கிற்று, உலகத்தினுடைய புதிய துவக்கத்திற்காக அது தன்னுடைய விலையேறப்பட்ட சரக்கை இறக்கிற்று.

## *16 ஆம் பாடத்தின் கேள்விகள்*

1) விசுவாசத் துரோகம் தூதர்களிடையே எங்கே எப்போது ஏற்பட்டது?
2) எவ்வளவு காலம் இது தொடர்ந்தது?
3) அதை சரி செய்ய யேகோவா தேவன் என்ன முயற்சி எடுத்தார்?
4) அதன் விளைவு என்ன? (1 பேது. 3 : 20) (பாரா 1)
5) தேவன் ஏன் நோவாவிடமும் அவன் குடும்பத்தாரிடமும் மாத்திரம் செயல்பாடுகள் வைத்திருந்தார்? (ஆதி. 6 : 9)
6) அவர்கள் என்ன செய்தார்கள்? (பாரா 2)
7) நோவாவின் போதனை என்ன?
8) ஜலப்பிரளயத்துக்கு முன்னும், ஜலப்பிரளயத்துக்கு பின்னும் பூமியில் இருந்த மக்களின் நிலை என்ன?
9) நோவாவின் போதனையால் எத்தனை பேர் மனந்திரும்பினார்கள்?
10) நோவாவின் மூலமாகவும், அவனுடைய போதனைகளின் மூலமாகவும், அவன் காலத்தில் இருந்த சமூக நிலையின் மூலமாகவும் சித்தரிக்கப்படுவது யாது? (பாரா 3)
11) ஜலப்பிரளயம் ஏற்படுவதற்கு காரணம் என்ன? (பாரா 4)
12) இதனால் ஏற்பட்ட உடனடி விளைவு என்ன?
13) ஜலம் எவ்வளவு காலம் பூமியை மூடியிருந்தது? (ஆதி. 7 : 24)
14) உலகத்தினுடைய தொட்டில் என்றால் என்ன? அது எந்த இடத்தில் இருந்தது?
15) இது சம்பந்தமாக புவியியல் ஆராய்ச்சியின் கருத்து என்ன?
16) நோவாவினுடைய பேழை எங்கே தங்கிற்று? (பாரா 5)

* * *

# வேதாகம கேள்வி பதில்கள்

**Bible Question and Answer**

இயேசுவின் மேல் உறுதியான நம்பிக்கையுடைய ஒருவர் பலவீனத்தின் காரணமாக ஒவ்வொரு முறையும் பாவத்தினால் மேற்கொள்ளப்பட்டால், அவர் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம் காரணமாக மீட்பை பெற்றுக் கொள்வாரா? அல்லது அவர் பாவத்தினால் கட்டுண்டதன் காரணமாக நரகத்தில் தள்ளப்படுவாரா?

உங்களுடைய கேள்வி மிகவும் நன்றாக இருக்கிறது. இதற்குரிய பதில் மிகவும் முக்கிய கருத்தை பெற்றிருக்கிறது. மனுக்குலத்தின் பாவம் நிறைந்த நிலையைப் பற்றி நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். மேலும் *“நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை”* (ரோம. 3 : 10) என்று வேதாகமம் சொல்கிறது என்பதையும் நன்றாக அறிந்திருக்கிறோம். ரோம. 7 : 19-ல் உள்ள அப்போஸ்தலரின் வார்த்தையை கவனிக்கும் போது *“நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்”* என்று கூறுகிறார். மேலும் நமது தகப்பன், நாம் உபத்திரவத்தின் மூலம் பாடத்தைக் கற்றுக் கொள்வதற்காக பாவத்தை நமது வாழ்க்கையில் அனுமதித்திருக்கிறார் என்று பவுல் குறிப்பிடுகிறார், மேலும் இதன் மூலம் பாவமும், மரணமும் வம்சாவழியாய் வந்தது என்பதையும் உணர்ந்து கொள்வோம். (ரோம. 5 : 12). நாம் பாவத்தினால் கறைப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டால், நமது முழங்கால்கள் அவருக்கு நேராய் முடங்கும், மேலும் இயேசுவை நமது இரட்சகராக ஏற்றுக்

கொள்வோம். இது விசுவாசத்தினால் நீதிமானாகுதல் என்ற நிலையை நமக்குக் கொடுக்கும். (ரோம. 5 : 2; 4 : 3-8).

தேவனிடம் சேருவதற்கு இதுவே முதல் படியாகும். மற்றொரு காரியமும் இருக்கிறது . அதாவது நம்முடைய சுயத்தை தேவனுக்கென்று முழுவதுமாக அர்ப்பணிப்பது அல்லது பிரதிஷ்டை செய்வதன் மூலமாகவும் தேவனை நெருங்கலாம். இதுவே தேவனால் பாராட்டக்கூடிய தேவனுக்கு பிரியமான ஆராதனையாகும். (ரோம. 12 ; 1, 2). பின்னர் அவர் நமக்கு அவருடைய பரிசுத்த ஆவியையும், நம்முடைய சாயலை வளர்த்துக்கொள்ள உதவி செய்வதற்கு அவருடைய உறுதியான பராமரிப்பையும், வல்லமையையும் தந்தருளுவார். இந்தப் பிரதிஷ்டை தேவனோடு நம்மை மிகவும் நெருங்கி வரச் செய்யும். நம்முடைய ஜீவியத்தில் இந்த நிலைமை வந்தடைந்த பின்னர், அவன் அல்லது அவள் முற்காலத்தில் தாங்கள் முழுவதுமாக விடுபட முடியாத பாவத்தில் ஒருவர் மறுபடியும் தடுமாறினால், பிறகு என்ன செய்வது? இந்த கிறிஸ்தவனுக்கு இரட்சிப்பின் ஆசீர்வாதம் அவனுடைய தனிப்பட்ட பலவீனத்தால் மறுக்கப்படுமா? நிச்சயமாக இல்லை! இதற்காகவே கிறிஸ்து மரித்தார் – ஆதாமினால் அவனுடைய சந்ததியார்க்கு வந்த பாவம் மற்றும் பலவீனத்திற்காகவே கிறிஸ்து மரித்தார். இந்த நிலையில் பாவத்துக்கு எதிராக நமக்கு நாமே போராட வேண்டும், ஆனால் நாம் அபூரணராதலால், தேவன் நம்மிடம் இந்த ஜீவியத்தில் முழுவதுமான பரிசுத்தத்தை எதிர்ப்பார்க்கவில்லை. தேவன் இருதயத்தை பார்க்கிறார், அதில் உள்ள எண்ணத்தின் படியே நியாயம் தீர்க்கிறார் என்ற கருத்தை பார்ப்பது சரியானதாக இருக்கும், இதையே பவுலும், ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்கும் தன்னுடைய மாம்சமே தன்னை ஆண்டது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் தன் மனதினாலே தன்னால் முடிந்த அளவுக்கு தேவனுக்கு ஊழியஞ்செய்ய விரும்புகிறார் – இதையே நாம் நாடுவோமானால், தேவன் நம்முடைய பாவங்களை மூடப்பட்டதாக எண்ணுகிறார் என்பதில் நாம் நம்பிக்கையாக இருக்கலாம். ஆனாலும் இதை நம்முடைய பாவத்திற்கு உரிய ஒரு அனுமதிச்சீட்டாக கருதக்கூடாது. தேவனுடைய கட்டளைகளை லேசாக எண்ணுவது நமக்கு நன்மை பயப்பதாக இருக்காது.

தெளிவாக இதை நாம் ஆராயும் போது, பெலவீனத்தால் மேற்கொள்ளப்பட்டு நாம் ஒவ்வொரு முறையும் கட்டுண்டவர்களாக ஆகும்போது, (ரோம. 3 : 10), நாம் தேவனிடம் சென்று ஜெபம் செய்து, அவருடைய இரக்கத்தையும், பெலத்தையும், தைரியத்தையும் அவருடைய விலையேறப்பெற்ற குமாரன் மூலம் நாடி, அந்த தவறை மேற்கொள்ள போராட வேண்டும். *“மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்”* (1 கொரி. 10 : 13) என்ற அதே அப்போஸ்தலரின் வார்த்தையின் மூலம் நாம் மேலும் நம்பிக்கையடையலாம். உங்கள் கேள்வியிலுள்ள நரகத்தைக் குறித்த விளக்கத்திற்கு B.S. 852 மே-ஜூன் -2009 பத்திரிக்கையைப் பார்க்கவும். வேண்டுமென்று கேட்பவர்களுக்கு ஒரு பிரதி இலவசமாகக் கொடுக்கப்படும்.

* * *

# யூபிலியை அறிவிக்கும் எக்காளத்தை ஊதுதல்

BLOWING THE JUBILEE TRUMPET

தேவன் இஸ்ரவேலர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணங்கள் மூலம் யூபிலி ஒழுங்கு முறைகளைக் கொடுத்தார். அது நமது இன்றைய நாட்களில் வங்கிக் கடனை திரும்பிக் கொடுக்க இயலாது போகையில் கடைபிடிக்கும் விதிகளைப் போன்றது. அதன் நிபந்தனைகள் மாத்திரம், மேலும் விரிவடைகிறது. ஒவ்வொரு ஐம்பதாவது ஆண்டு வரும் போதெல்லாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் யூபிலி வருடத்தில் எல்லாக் கடன்களும் இல்லாமல் ஆக்கப்படும். ஒரு குடும்பம் தன் சுதந்திர வீதத்தை ஒரு வேளை விற்றுப் போட்டிருக்கலாம். ஆனால் அதனை வாங்கியவருக்கு அது யூபிலி ஆண்டு வரும் வரையில்தான் சொந்தம். அடிமைத்தனத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களின் ஊழியங்கள் யூபிலி ஆண்டு வருகையில் முடிவடைகிறது. இந்த யூபிலி ஆண்டில் எல்லா கடன்களும் தள்ளப்படுகிறது. (லேவி. 25 : 8-10). இது நன்மை பயக்கும் ஒரு சிறப்பு அம்சம் கொண்ட ஒழுங்கு முறையை சித்தரித்து அல்லது அடையாளப்படுத்திக் காட்டுகிறது. இது தேவனுடைய

யுகங்களைப் பற்றிய மாபெரும் திட்டத்தில் முழுமையாக என்ன நடக்கப்போகிறது என்பதைக் குறிப்பிடுகிறது.

இங்கு கடன்பட்டு இருக்கும் மனிதன் பாவியை அடையாளப்படுத்துகிறான். – அதாவது ஆதாம் மற்றும் அவனது சந்ததியையும் அடையாளப்படுத்துகிறான். தன் ஆஸ்தியை விற்றுப் போடுவது என்பது ஆதாமிடமிருந்து ஜீவாதார உரிமைகளும் இந்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் பறிமுதல் செய்யப்பட்டதைக் குறிக்கிறது. பாவத்தின் விளைவாக இது மனுக்குலத்தின் மீது வந்தது. வேலைகளில் குடும்பத்தார் அடிமைப்படுதல் பாவத்திற்கும் மரணத்திற்கும் மனுஷீக பெலவீனத்தினால் அடிமைப்படுத்தப்பட்டது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரகாரம் மனிதன் சதாகாலத்திற்கும் எப்போதும் தொடர்ந்து பூரணமற்ற நிலையில் அறியாமையோடு அடிமையாகவே இருக்கவேண்டுமெனவும், அவனது மிகப் பெரிய சத்துருவாகிய சாத்தானால் விலங்கிடப்பட்ட நிலையில் வாழ வேண்டுமெனவும் தேவன் ஒருபோதும் ஒழுங்கு செய்தது கிடையாது என்பதை இவ்விதமாகக் காட்டுகிறார். மனிதன் தன் மரணத்தின் மூலம் தனது பிறப்புரிமையை சதாகாலத்திற்கும் இழந்து போக வேண்டுமென தேவன் ஒருபோதும் எண்ணியது கிடையாது. அவைகளை மேசியாவின் ராஜ்யத்தின் மூலம் யூபிலி காலக்கட்டத்தில் திரும்பக் கொண்டுவர வேண்டும் என உலகத்தோற்றமுதல் தேவன் சித்தம் கொண்டிருந்தார். அக்காலத்தின் போது மனிதன் ஆதியிலே தான் பெற்றிருந்த தன் சுயாதீனத்திற்கும் ஆசீர்வாதங்கள் மற்றும் தேவ கிருபைக்கும் திரும்புவான். இப்படியாக மேசியாவின் ராஜ்யத்தின் இந்த காலங்கள் அல்லது வருஷங்களை *"இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் காலங்கள்"* என வேதாகமம் வர்ணிக்கிறது. இந்த திரும்ப கொடுக்கும் வேலைக்கு அடிப்படை தத்துவமாக அமைந்திருப்பது இயேசுவின் மரணம். அவர் *"அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராய்"* தாமே மனப்பூர்வமாக பலியாக மரித்தார். இந்த இழந்து போனதை திரும்பக் கொடுக்கும் காலங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தொடர்ந்து வரும். அப்போது அவர் தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து மனப்பூர்வமாகவும் கீழ்ப்படிதலுடனும் இருப்பவர்களுக்கு, அவர்கள் ஏதேனில் இழந்ததைத் திரும்பக் கொடுப்பார். (அப். 3 : 19-21).

இஸ்ரவேலரின் யூபிலி மேசியாவின் மாபெரும் ஆயிர வருட யுகத்தை அடையாளப்படுத்திக் காட்டும். அக்காலத்தின்போது பாவமும் மரணமும் என்றென்றும் இல்லாதபடி அழிக்கப்படும். *"சிருஷ்டியானது (மனுக் குலமானது) அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும்"* (ரோம. 8 : 20) என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார்.

இந்த யூபிலியில் இவ்வுலகத்தோடு கூட சபையானது பங்கு பெறாது. ஆனால் விசுவாசத்தின் மூலம் அதை விட சிறந்த நல்ல பங்கைப் பெற்றிருக்கிறார்கள். – அவர்கள் கிறிஸ்துவுடனேகூட உடன் சுதந்திரவாளிகளாக அவருடனேகூட இணைக்கப்பட்டவர்களாக, அவருடைய மணவாட்டியாக, இந்த உலகிற்கு இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் பணியில் தேவனுடைய பிரதிநிதிகளாக இருந்து செயல்படுவார்கள். வேதாகம ரீதியாக இவை நிறைவேற நாம் எதிர்நோக்கினால் இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் காலங்களுக்கு சற்று தான் நாம் முன்னதாக இருக்கிறோம் என்பதைக் கண்டு கொள்வோம். இப்போது வெள்ளி பூரிகையானது இந்த புதிய யுகத்தைப் பற்றிய செய்தியை அறிவித்து வருகிறது. எப்படி இஸ்ரவேலின் ஆசாரியர்கள் அந்த வெள்ளி பூரிகையை ஊதினார்களோ அதே போல இங்கே ராஜரீக ஆசாரிய வகுப்பார் இழந்து போனதைத் திரும்பப் பெறுவது சம்பந்தமான சத்தியத்தைத் முன் கூட்டியே அறியப்பண்ணுகிறார்கள்.

* * *

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Laymen's Home Missionary Movement**

32 D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com

FOR PRIVATE CIRCULATION ONLY